PERIODICAL DIVISION

2011 டிசம்பர்
அணி 08 படை 02
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் | செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

**முதலாளித்துவத்தின் நெருக்கடியும் சர்தாப்பவாதிகளின் ஒன்றிணைவும்**



பக்கம் 04

**தோட்டத் தொழிலாளர்களின் *EPF* நிதிக்கு வேட்டு!**



பக்கம் 05



**மரணபடுக்கையை நோக்கிய முதலாளித்துவமும் எழுச்சிபெறும் மக்கள் போராட்டமும்..**




பக்கம் 11

## உஉவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம்..



1989ம் ஆண்டு அன்றைய முதலாளித்துவ ஆட்சியாளர்களான ஐக்கிய தேசிய கட்சியால் கொடூரமாக கொல்லப்பட்ட தோழர் ரோஹண விஜேவீரதோழர், தோழியரை நினைவு கூறும் தினமான கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம் 2011.11.13ம் திகதி கொழும்பு வீ –காரமாதேவீ வெளியரங்கில் நடைபெற்றபோது அதில் கலந்துக்கொண்ட பெருந்திரலான மக்களையே படத்தில் கான்கின்றீர்கள்.

# நாட்டில் ஜனநாயகம் ஆபத்தில் !

**மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் புதிய லிபரல்வாத பொருளாதாரத்திற்கு எதிராக அணிதிரண்டுவரும் மக்கள் சக்தியை அடக்குமுறை செய்வதற்காகவும், எதிர்தரப்பு அரசியல் வாதிகளை பழிவாங்குவதற்காகவும், அரசாங்கத்தின் முடியாமை, சர்வாதிகாரத்தை பகிரங்கப்படுத்தும் ஊடகங்களையும் ஊடகவியளார்களையும் அடக்குமுறை செய்தும், வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் இராணுவ ஆட்சியும், அடாவடித்தனங்களும் நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்துள்ளது. சரத் பொன்சாக்காவை தொடர்ந்தும் சிறையில் வைத்திருத்தல், முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர் சரத் என் சில்வா அவர்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் தெரிவுக் குழுவொன்றை ஸ்தாபித்தல் உட்பட அரசியல் ரீ-தியான எதிர்தரப்பினர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளை அரஅரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.**

ஊடகவியளாலர் எக்னெலிகொட அவர்கள் காணமல்போயுள்ள அதேவேளை, இன்னும் பல ஊடகவியளாலர்கள் பாதுகாப்பு காரணமாக இந்நாட்டை விட்டு வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஊடக நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் மேல்மட்ட நபர்களிடமிருந்து தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் வருகின்றதோடு அரசாங்கத்திற்கு எதிரான செய்திகள் வெளியிட்டதால் 5 இணையதளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 2 1/2வருடங்கள் கடந்துள்ள சூழல்நிலையில் வடக்கு கிழக்கு மக்களை துன்புறுத்தும் சூழல் இன்னும் மாற்றமடையவில்லை. ஊடகவியலாளர்கள், மாணவர்கள் பட்டப்பகலில் தாக்குதல்களுக்குள்ளாகும் அதேவேளை அவற்றுக்கு பொருப்பானவர்களை அரசு கண்டுபிடிப்பதுமில்லை. ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு அரசுக்கு இன்னும் இயலாத நிலை காணப்படுகின்றது. கைது செய்யப்பட்ட அல்லது தடுத்துவைத்துள்ளோரின் பெயர் விபரங்களை வெளியிடுவதற்கு அரசு இன்னும் முயற்சியெடுத்தபாடில்லை. இது மட்டுமன்றி பலவந்த ஆட்பதிவு, சிவில் நிர்வாகத்திற்கு பதிலாக இராணுவ தலையீடுகள் போன்ற காரணங்களினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் வாழ்வு மிகவும் கேள்விக்குறியாகியுள்ளது.

அரசின் புதிய லிபரல்வாத கொள்கைகளுடன் முரண்படும் சக்திகளுக்கு எதிராக அடக்குமுறையை கொண்டுவரும் அரசின் நடவடிக்கையின் அண்மித்த நிகழ்வு கடந்த 30ம் திகதி கொழும்பில் தொழில் வாய்ப்பு கோரி நடத்திய கண்டன ஆர்பாட்டத்தை. அரசாங்கம் பொலிசாரைக் கொண்டு கண்ணீர்புகை, தண்ணீர் பீச்சியடித்து தடிகளினால் தாக்கியதால் பலர் காயப்பட்டனர்.

அரசாங்கத்தின் இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத்திடம் செஞ்சக்தி வினவியபோது, அரசின் இந்த ஜனநாயகவிரோத நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்காக பரந்தளவிலான மக்களை அணிதிரட்டுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகவுள்ளதாகவும் இது குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் எதிர்காலத்தில் பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார். ஜனநாயகத்திற்கு மாறாக மக்களை அடக்குமுறை செய்த அரசாங்கங்கள் வரலாற்றில் குப்பை கூடமே உரித்தாகியது என்றும் தோழா விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை வரவு — செலவு திட்டத்திலும் இளைஞரை மறந்த ராஜபக்ஷ



எமது நாட்டின் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், பட்டதாரிகள், தொழில் களிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் சார்பாக எந்தவொரு சலுகையும் ராஜபக்ஷவின் வரவு- செலவு திட்டத்தில் வழங்கப்படவில்லை என சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பா. உ. பிமல் ரத்நாயக்க அரசை குற்றம் சுமத்துகிறார். இவர் இக்கருத்துக்களை கடந்த 27ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

அதில் மேலும் கருத்துதெரிவிக்கையில், கடந்த வரவு-செலவு திட்டங்களால் ஏமாற்றப்பட்டதைப் போன்று இம்முறை வரவு-செலவு திட்டத்திலும் நாட்டின் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். எமது நாட்டு இளைஞர்களின் எரியும் பிரச்சினையான தொழில் வாய்ப்பு பிரச்சினை குறித்து வெறும் ஆறு வரிகளை மட்டுமே ஒதுக்கியுள்ளார்.

இம்முறை வரவு-செலவு திட்டம் சமர்பிப்பதற்கு முன்பு பெற்றோலின் விலை அதிகரித்து, வரி அதிகரிக்கப்பட்டது, அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்து, காணிகளை சுவிகரிக்கப்பட்டு, கசினோ சூதாட்ட பிரேரணைகளை கொண்டுவந்து, சூதாட்ட வலையங்கள் நிர்மாணித்து, IMF ற்கு தேவையான விதத்தில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது.

2006ல் ராஜபக்ஷ ஜனாதிபதியினால் நாட்டுக்கு 10வருடத்திற்கான திட்டத்தையே சமர்பித்தார். எமது நாட்டில் 19வயதுக்கும் 25வயதுக்கும் இடைப்பட்டோரில் 28/ த்திற்கு தொழில் வாய்ப்பு இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது 5 வருடங்கள் கடந்து விட்டுள்ளது. மறுபுறம் யுத்தம் முடிந்து இரண்டரை வருடங்கள் தாண்டியுள்ளது. பத்தாண்டு திட்டத்தை அமுல்படுத்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேபோன்று தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு கொடுக்கவென்று அன்று 850 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. நாம் வினவுகின்றோம் தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு இக்கொடுப்பனவு கிடைத்ததாவென்று. இம்முறை வரவு-செலவு திட்டத்திலும் அதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை.

அரசு கூறியது பிரமாண்டமான அபிவிருத்தி திட்டங்களுடாக இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்க முடியும் என்று. .எமது நாட்டில் இளைஞர்களில் தொழில்வாய்ப்பில்லாதோரின் எண்ணிக்கை சுமார் 25 லட்சம், ராஜபக்ஷ பதவிக்கு வந்து 7வருடங்களாகின்றது வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 42000ம், தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் அவற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 3லட்சம். கமிஷன்களை பெற்றுகொள்ள மட்டுமே இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்கின்றனர்.

அதேபோன்று கொரியா தொழில்வாய்ப்புகள் தொடர்பாகவும் இம்முறை வரவு-செலவு திட்டத்தில் எந்தவித குறிப்பும் இல்லை. கொரிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதாகக் கூறி விண்ணப்பங்களை நிரப்பியே கடந்த கால தேர்தல்களில் மக்களின் வாக்குகளை இந்த அரசு சூறையாடியது. கொரிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக இந்நாட்டு இளைஞர்கள் ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவின் பின்னால் செல்ல நேரிட்டது.

தொழில் என்பது ஓர் உரிமை என்பதை இந்நாட்டு இளைஞர்களை நாம் வலியுறுத்துகிறோம். இந்த உரிமையை வென்றெடுப்பதற்காக போராடுவதற்கு சோஷலிச இளைஞர் சங்கத்தில் நாம் தயாராகவுள்ளோம். இப்போராட்டத்தில் உயர்தரம் சித்தியடைநத தொழில்வாய்ப்பற்றவர்களும், தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட இளைஞர்களும், ஒருங்கிணைத்து இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்க வற்புறுத்தியும், தொழில் கிடைக்கும் வரையும் கொடுப்பனவொன்று வழங்கும் படியும் போராட தயாராகவுள்ளோம்.

## சுவசேவா சங்கத்தின் 14வது வருடாந்த மாநாடு



அகில இலங்கை சுவசேவா சங்கத்தின் 14வது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உழைக்கும் மக்களின் சக்தியை கட்டியெழுப்புவதற்காகவும், உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் ஒன்றாய் போராடுவோம்! என்ற தலைப்பின் கீழ் நடைபெற்ற இம் மாநாட்டில் பிரதம அதிதியாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு அங்கத்தவருமான தோழர் கே.டி. லால்காந்த கலந்து கொண்டு உரையாற்றினார்.

## 18வது WFDY மாநாட்டில் சோஷலிச இளைஞர் சங்கம்




உலக ஜனநாயக இளைஞர் ஒன்றியத்தின் 18வது மாநாடு நவம்பர் 08ம் திகதி முதல் 12 வரையில் போர்த்கேய நாட்டில் நடைபெற்றது. அதில் சோஷலிச இளைஞர் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்து அதன் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்னாயக்கா மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றினார். அதில் ஆபிரிக்கா, ஆசியா பசுபிக், லத்தீன் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் உட்பட 52 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் செய்து கலந்துதோடு அம்மாநாட்டில் புதிய நிர்வாக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# உலக வங்கியின் 10 மில்லியனுக்காக 1590 பாடசாலைகளை பலிகொடுக்க அரசு தயார்.

*சோஷலிச மாணவர் சங்கம்*



மக்களுக்கு அதிவேகக் கனவுகளைக் காட்டி அரசு 10மில்லியன் கடன் தொகையை பெற்றுகொள்வதற்காக 45000 பல்கலைக்கழக மாணவர்களின் மற்றும் . 39 இலட்ச பாடசாலை மாணவர்களின் கல்விச் சுதந்திரத்தை பலிகொடுக்க தயாராகவுள்ளதாக சோஷலிச மாணவர் சங்கம் அரசை குற்றம் சாட்டுகிறது. நவம்பர் 28ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துக்கொண்ட சங்கத்தின் இணைப்பாளர் தோழர் நலிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்ட கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், உலக வங்கியின் வற்புறுத்தலுக்கு கல்வித்துறைக்காக ஒதுக்கும் நிதியை துண்டித்து அடுத்த வருடத்திற்குள் 1590 பாடசாலைகளை மூடி, பின்பு ஒருசில வருடங்களுக்குள் பெற்றுகொள்ளவுள்ள இன்னும் 500 மில்லின் டொலர் கடன் தொகையை பெற்றுகொள்வதற்காக படிப்படியாக இலவசக் கல்வியை இரத்து செய்வதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் சங்கம் தெரிவிக்கின்றது. தற்போது நாட்டில் அரச பாடசாலைகள் எண்ணிக்கை 9562வரை குறைந்துள்ளதாகவும். 2012ம் ஆண்டில் இதில் இன்னும் 1590 பாடசாலைகளை மூடி இலவசக் கல்வியை குழிதோண்டி புதைப்பதற்கு அரசு தயாராகின்றதென்றும். இத்திட்டத்தை நடைமுறை படுத்த ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்றும் நலிந்த ஜயதிஸ்ஸ கூறினார்..

மறுபுறம், ரகசியமாக தயாரித்த தனியார் பல்கலைக்கழக பிரேரணையை அடுத்த ஜனவரியில் பாராளுமன்றத்தில் அமுல்படுத்துவதற்கு அரசு தயாராகவுள்ளது. இது இந்நாட்டு இலவசக் கல்வியை முற்றாக குழிதோண்டி புதைக்கும் திட்டம் என்பதால் இத்திட்டத்தை தோற்கடிப்பதற்கு இந்நாட்டு புத்திஜீவிகள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், வைத்தியர்கள், பொதுமக்களுடன் ஒன்றிணைந்து போராட தயாராகவுள்ளதாகவும். ஏற்கனவே இத்திட்டத்தை தோற்கடிப்பதற்காக இலவசக் கல்வியை பாதுகாப்பதற்கான தேசிய நிலையத்தை நிறுவி செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பாலஸ்தீனத்துக்கு சுதந்திரமாக வாழவிடு!



நவம்பர் 29ம் திகதிக்கான பாலஸ்தீன் நட்புறவு தினத்தை முன்னிட்டு இம்முறையும் சோஷலிச இளைஞர் சங்கத்தினால் "பாலஸ்தீனத்துக்கு சுதந்திரமாக வாழவிடு" என்ற தலைப்பில் பல்வேறு ஏற்பாடுகளை ஒழுங்கு செய்துள்ளது. சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்து இத்திட்டங்கள் செயல்படுத்த தயாராகவுள்ளது. பாலஸ்தீன் பதாகையில் கையொப்பமிடுதல், கண்டன மனுக்களில் கையொப்பமிடுதல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், திரைப்படகாட்சிகளை திரையிடல் போன்றவை இத்திட்டத்தில் அடங்குகின்றது. அவ்வாறே மக்களை அறிவுறுத்தும் கருத்தரங்கை கொழும்பு பொதுநூலகத்தில் நடத்துவதற்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# துறைமுக கூட்டுறவு சங்க தெரிவில் ம.வி.மு அமோக வெற்றி!

2011.11. 22ம் திகதி நடைபெற்ற துறைமுக நலன்புரி கூட்டுறவு சங்க தெரிவுக்காக நடைபெற்ற வாக்கெடுப்பின் போது மக்கள் விடுதலை முன்னணி சார்பான துறைமுக தொழிற்சங்கமான அகில இலங்கை துறைமுக நலன்புரி பொதுச் சேவை சங்கம் பெரும் வெற்றியீட்டியது.



துறைமுகத்தில் பல்வேறு பிரிவுகளுக்கு பிரதிநிதிகளை நியமிக்கும் இந்த வாக்கெடுப்பின் போது மக்கள் விடுதலை முன்னணி சார்ந்த தொழிற்சங்கத்தினால் 81 பிரதிநிதிகளை போட்டியிட்டதோடு இதில் 72பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்..

அரசாங்கம் சார்பான தொழிற்சங்க பிரதிநிதிகளும் வாக்களிப்பில் கலந்துகொண்டதோடு அரசாங்கத்தின் அனுசரனையுடன் மக்கள் விடுதலை முன்னணி சார்பான குழுவுக்கு எதிராக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுத்த மக்கள் விடுதலை முன்னணியின் குழுவை தோற்கடிப்பதற்காக பல்வேறு இடையூறுகள், அச்சுறுத்தல்கள் மேற்கொண்ட போதிலும் இந்த சவால்களை தோற்கடித்து வெற்றிகொண்டதோடு இச்சந்தர்ப்பத்தில் மிகவும் துணிச்சலுடன் வாக்களித்தவர்களுக்கும் தமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்வதாக துறைமுக பொதுத் தொழிற்சங்கத்தின் தலைவர் தோழர் சந்திரசிறி தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சக்தி
மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
198.'.19 பஞ்சிகாவத்தை வீதி ,கொழும்பு -10 011-2345594
E-mail sensackthynews@gmail.com

## பிரச்சினையை தீர்ப்பதற்கா? அல்லது வயிறு வளர்ப்பதற்கா?

மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் தோல்வி கண்டுள்ள முதலாளித்துவம், அதற்குப் பதிலாக மேலும் பிரச்சினைகளை தோற்றுவித்து அதில் உயிர்வாழ்வதே இருப்பாகவுள்ளது. அப்படியிருந்தப் போதிலும் நெருக்கடிகளை மேலும் தமது இருப்பாக கொண்டு நெருக்கடிகளுக்கு தீர்வினைத் தேடுவதாக கூறி நாட்களை கடத்துவதைத் தவிர மாற்று நடவடிக்கைகள் முதலாளித்துவத்திற்கு கிடையாது.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைத் தேடுவதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழுவென்றை அமைப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன் மொத்த அங்கத்தவர்கள் 31 பேரில் அரசாங்க உறுப்பினர்கள் 19 பேரும் எதிர்கட்சி உறுப்பினர்கள் 12 பேரும் உள்ளடங்குவர். இந்த குறிப்பினை எழுதும்போது ஐ.தே.க மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இதில் கல்ந்துக் கொள்வது பற்றி முடிவு செய்திருக்கவில்லை. அதேவேளை இந்த ஏமாற்று நடவடிக்கைகளில் கலந்துக் கொள்வதில்லையென ம.வி.மு முடிவுசெய்துள்ளது.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வினைத் தேடுவதாக கூறி அமைக்கப்பட்ட குழுக்கள், மற்றும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் பலவா-கும். அண்மைய வரலாற்றில் 1985ல் திம்பு பேச்சுவார்த்தை முதல், வட்டமேசை மாநாடு, அண்மையில் மகிந்த ராஜபக்ஷ நடத்திய சர்வகட்சி மாநாடு சர்வகட்சி குழு வரையென பட்டியலாக நீள்கிறது. எல்லா அரசாங்கங்களும் 'பேச்சுவார்தததை' மற்றும் "குழுக்கள்" அமைத்தன் மூலமாக வயிறு வளர்த்து நாட்களை கழித்தார்களே தவிர தமது பொறுப்பிலிருந்து மீண்டாகளே தவிர தேசியப் பிரச்சினைக்கு தீர்வினை முன்வைக்க வில்லை.

வர்க்கப் பிரச்சினையின் காரணமாக தோன்றிய பிரச்சினைக்கு, இருப்பதோ வர்க்கத் தீர்வாகும். எதிரும் புதிருமான வர்க்கங்களைக் கொண்ட சமூகத்தில், அனைவரும் இணங்கக் கூடிய தீர்வு கிடையாது. அப்படி தீர்வு இருக்கவும் முடியாது. தேசியப் பிரச்சினை தொடர்பாகவும் அது பொருந்தும். முதலாளித்துவ அரசாங்கத்திற்கு தெரியாத ஒன்றல்ல. இதுபற்றி முதலாளித்துவ குழுக்களிடையே வேறுபட்ட கருத்துகள் நிலவுகிறது. அப்படியிருக்கும் போது தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படுவது பிரச்சினைக்கு உண்மையான தீர்வினைத் தேடுவதற்கல்ல. அரசாங்கம் தம் பொறுப்பிலிருந்து மீள்வதற்கும், அப்பொறுப்பினை மறறவர்கள் மீது சுமத்துவதற்கேயாகும். ராஜபக்ஷ அரசாங்கம் இப்போது தெரிவுக் குழு அமைத்திருப்பது இதற்கு முன்னர் தம்மால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு போலியான சர்வகட்சிக் குழு-வினால் (அது சர்வகட்சி குழுவல்ல) தயாரித்த யோசனைகள் மற்றும் அறிக்கையினை பற்றி எதுவிதமான தெளிவு படுத்தலுமின்றியேயாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்த ராஜபக்ஷ கூறியதாவது தம்மிடம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு உளள்தெனவும் தாம் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செயய்ப்பட்டால் அதை நடைமுறைபடுத்துவதாகவும் கூறினார். இதன் பின்னர் பொதுத் தேர்தலின்போது அரசாங்கத்தின் தலைவர்கள் கூறியதாவது தேசிய பிரச்சினைக்கான தீர்வு திட்டம் ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் இருப்பதாகவும் அதை நடைமுறைபடுத்த 3/2 பெரும்பான்மைனையை பெற்றுத் தரும்படியும் கோரினர். இப்போது அரசாங்கத்திற்கு 3/2 பெரும்பான்மை உள்ளது. ஆனால் ஜனாதிபதியினதோ ஸ்ரீ.ல.சு. கட்சியினதோ "தீர்வு" திட்டம் முன்வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மீண்டும் "அரட்டை அரங்கம்" மேடையேற்றப்படவுள்ளது. எனவே இப்போது செய்யவேண்டியது அரசாங்கத்திடமிருப்பதாக கூறிய "தீர்வினை' நாட்டிற்கு முன்வைப்தேயாகும். அதை விடுத்து "பொலிஸ் கள்ளன்" விளையாட்டு பிரயோசனமறறதாகும்.

தமது வர்க்க நோக்கத்திற்கோ அலல்து அரசாங்கத்தின் தேவைகளுக்கு தேவையான தீர்மானங்களின்போது அரசாங்கத்திற்கு தெரிவுகுழுவோ கலந்துரையாடலோ தேவைப்படாது. அதன்போது பாராளுமன்றத்தில் 3/2 பாவித்து சட்டங்களை நிறைவேற்றுகின்றனர். நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரண்டு தடவை எல்லையை நீக்குவதற்கு தேவைபட்டபோது அதற்கு பாராளுமன்றத்தில் 3/2 பாவித்து 18வது அரசியல் யாப்பு திருத்தத்தை நிறைவேற்றியது. இது மக்கள் எதிர்பபினை பொருட்படுத்தாமலாகும். அதேபோன்று அண்மையில் நிறைவேற்றப்பட்ட நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை கையேற்றல் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் பெரும் அவசரத்தை காட்டியது. அதுபோன்ற அவசரம் தேசிய பிரச்சினனையை தீர்ப்பதில் காட்டுவதற்கு தயங்குவதேன்? அதவது அரசாங்கத்திற்கு இதுதொடர்பாக தேவையோ அக்கறையோ இல்லையென்பதாகும். அரசாங்கத்தின் போலித் தீர்வு "அதிகார பகிவு" என்பதால் அதை முன்வைப்பதற்கு அரசாங்கத்திற்கு துணிவு கிடையாது என்பதையே வெளிகட்டுகிறது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் முகமகொடுத்துள்ள இன்னும் தீர்க்கப்படாத பாரிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தெரிவுகுழு அவசியப்படாது. தேவைபடுவதெல்லாம் செயற்படுத்துவது மட்டுமேயாகும். வடக்கில் இடமபெயந்தவர்களை குடியேற்றுவதற்கு, அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டை பெற்று கொடுப்பதற்கு, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு, வடக்கில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டுவதற்கு தெரிவுக்குழு தேவையில்லை. அவைகள் யுத்தம் முடிந்தபின்னர் தீக்கப்பட்டிருக்க வேண்டிய பிரச்சினைகளாகும். அபப்டியான சரளமான பிரச்சினைகளை தீர்க்காது தான்தோன்றித்தனமாக செயற்படுகின்ற அரசாங்கம், தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு தெரிவுக் குழு அமைக்கப்பபோவது நேர்மையான இதயசுத்தியுடன் அல்ல. எனவே அரசாங்கத்தின் இந்த மோசடிக்கு எவரும் பங்காளிகளாககூடாது.

இப்போது சிங்கள, தமிழ், முஸ்லிம மக்கள் செயய் வேண்டியது அரசாங்கத்தின் இந்த மோசடிமிக்க செயற்பாடுகளை புரிந்துக் கொண்டு அவைகளை நிராகரிப்பதுமாகும். வட கிழக்கில் எரியும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வினை பெற்றுக் கொடுக்கும்படி வலியுறுத்துவதாகும். "தேச-ிய பிரச்சினைக்கு" அரசாங்கத்தின் தீர்வினை உடனடியாக முன்வைக்குமபடி வலியுறுத்துவதாகும் தேசிய பிரசசினையை வர்க்க பிரச்சினையாக தீர்ப்பதற்காக முதலாளித்துவத்திற்கு எதிராக அணிதிரள்வதாகும்.

## தெரிவுகுழு தெரிவு என்பது ஒரு கண்துடைப்பு

## ஜனநாயகம் என்னும் போர்வையில் தமிழ் மக்கள் உரிமைகள் பறிப்பு

### ஜே.வி.பி கண்டணம்




தேசிய பிரச்சினைக்கு தீர்வை வழங்காது காலத்தை கடத்துவதற்காகவே அரசாங்கம் தெரிவுக்குழு பிரேரணையை முன்வைத்துள்ளது எனவே, இந்த ஏமாற்றுகுழு பேச்சுக்களில் ஜே. வி. பி. கலந்துகொள்ள போவதில்லையென பாராளுமன்ற உறுப்பினர் தோழர் அநுரதிசாநாயக்க எம். பி. தெரிவித்தார்

வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை.அரை இராணுவ நிர்வாகமே நடைமுறையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெலவத்தையிலுள்ள ஜே. வி. பி.யின் தலைமையகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அநுர திசாநாயக்க எம் பி இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். தேச-ிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜே. ஆர். காலம் தொடக்கம் பிரேமதாஸா சந்திரிக்கா, ரணில் உட்பட தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

அளவுக்கு அதிகமான பேச்சுக்கள் நடத்தப்பட்டு விட்டன. இன்றைய அரசாங்கம் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் சர்வகட்சி மாநாட்டை 110க்கும் மேலதி-கமான கூட்டங்களை நடத்தி 11,000 பக்கங்களைக் கொண்ட அறிக்கையையும் வெளியிட்டது.

இதன் மூலமும் தீர்வு வழங்கப்பட்வில்லை மக்களின் பணம் வீணடிக்ககப்பட்டது. பிரச்சினையிலிருந்து நழுவிப்போகவே தெரிவுக்குழு அமைக்கப்படுகின்றது. தேச-ிய பிரச்சினைத் தீர்வுக்கு அரசியலமைப்பு திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை நிறைவேற்ற மூன்றிலிரண்டு பலம் வேண்டுமென அமைச்சர் நிமால் சிரிபால டி சில்வா தேர்தலுக்கு முன்பு தெரிவித்தார்.

இன்று அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பலம் உள்ளது. அவ்வாறெனில் தெரிவுக்

*தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜே. ஆர். காலம் தொடக்கம் பிரேமதாஸா.சந்திரிக்கா. ரணில் உட்பட தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அளவுக்கு அதிகமான பேச்சுக்கள் நடத்தப்பட்டு விட்டன. இன்றைய அரசாங்கம் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையில் சர்வகட்சி மாநாட்டில் 110க்கும் மேலதி-கமான கூட்டங்களை நடத்தி 11,000 பக்கங்களைக் கொண்ட அறிக்கையையும் வெளியிட்டது. இதன் மூலமும் தீர்வு வழங்கப்பட்வில்லை மக்களின் பணம் வீணாக்ககப்பட்டது. பிரச்சினையிலிருந்து நழுவிப்போகவே தெரிவுக்குழு அமைக்கப்படுகின்றது.*

குழு அமைத்து காலத்தை கடத்தாது திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டும்

வட பகுதியில் மட்டும் முழுமையாகவும், பகுதியா-கவும் 10,5000ம் வீடுகள் சேதம்டைந்துள்ளன. ஐம்பதினாயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதாக இந்தியா தெரிவித்தது. ஆனால், யுத்தம் முடிந்து இரண்டரை வருடஙகள் கழிந்தும் 250 வீடுகளை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்நிலை நீடித்தால் மக்களுக்கு வீடுகளை அமத்துக் கொடுக்க இந்தியாவிற்கு 500 வருடங்கள் தேவ்வப்படும்

அது வரை அம்மக்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும், அல்லது கூடாரங்களிலா வாழ்வது? யுத்தத்தால் வட பகுத-ியில் 27000ம் பேர் விதவைகளாகியுள்ளனர் பொதுவாக எடுத்துக் கொண்டால் ஒரு இலட்சத்திற்கு மேல் விதவைகள் உள்ளனர். கணவர் இல்லாத இவர்கள் எப்படி வாழ்வது, இவர்களுக்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? தாய் அல்லது தந்தையை இழந்த பிள்ளைகள் 5000ம் பேர் இருப்பதாகவும் இருவரையும் இழந்த பிள்ளைகள் 12000 பேர் இருப்பதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இப்பிள்ளைகளை வாழவைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன. ஏ- 9 பாதைக்கு மேலாக அதிவேக வடபகுதி ம்க்கள் இராணுவ நிர்வாகத்தின் கீழேயே வாழ்கின்றனர். அரசியல் கூட்டமோ பொதுக் கூட்டமோ நடத்த முடியாது அங்கு உளவுப் பிரிவி-னரே அதிகமாக கல்ந்து கொள்கின்றனர். உறவினர்-னகள் வீடுகளுக்கு வரமு-டியாது உளவுப் பிரிவினரால் விசாரிக்கப்படுகின்றனர் அப்பிரதேச பிள்ளைகளுக்கு கல்வி, ஜனநாயகம் மறுக்கப்படுகிறது. வாழ்வதற்கு வீட்டில்லை. இந்நிலை தொடருமானால் எதிர் காலத்தில் அவர்கள் ஜனந-ாயக விரோதச் செய்கைகளில் ஈடுபடும் நிலைமை உருவாகும் என்றார். அந்த ஊடகவ-ியலாளர் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களும் கலந்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவத்தின் நெருக்கடியும் சந்தர்ப்பவதத்தின் ஒன்றிணைவும்



2008 செப்டம்பரில் அமெரிக்காவின் நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தொழிற்துறைகளை வீழ்ச்சிக்குள்ளாக்கி ஆரம்பமான பொருளாதார வீழ்ச்சி, பலம் பொருந்திய முதலாளித்துவ நாட்டுத் தலைவர்களின், பொருளாதார வல்லுனர்களின் எல்லாவிதமான எதிர்பார்ப்புகளையும் சிதைவடையச் செய்து, எதிர்வு கூரல்களை பொய்யாக்கி தொடர்ந்தும் நெருக்கடி நீள்கிறது.

அந்த பொருளாதார வீழ்ச்சிப் புயலில் சிக்கி பலம்பொருந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் வீழ்ச்சியுறும் போது மில்லியன் கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராடுவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். ஐரோப்பா முழவதிலும் இடம்பெற்றுவரும் தற்போதைய ஆர்பாட்டங்கள், ஊர்வலங்கள் கண்டனப் பேரணிகள் மூலமாக கோடிட்டுக் காட்டப்படுவது ஏகாதிபத்தியத்தின் புதிய தாராளமயக் கொள்கையில் தோன்றியுள்ள மதிப்பீடே ஆகும்.

முதலாளித்துவம் எதிர்கொண்டுள்ள பொருளதார நெருக்கடியைப் பற்றிப் பேசும்போது கடந்த காலம் பூராவும் நமது நாட்டில் பேசப்பட்ட விடயம் "அமெரிக்காவிற்குகும், இங்கிலாந்திற்கும் தடிமன் பிடிக்கும்போது எமது நாட்டிற்கு காய்ச்சல் வருகிறது" என்பதாகும். அதில்

ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டுவரும் அரசாங்கத்தால் மேலும் மேலும் கடன் பெறுவதைத் தவிர நாட்டையும், நாட்டு மக்களையும் விற்பதைத் தவிர, கல்வியைத் தனியார்மயப்படுத்தி, மக்கள் நலன்சார்ந்த சேவைகளை நலிவடையச்செய்து மக்கள் மீது சுமைகளை ஏற்றிஅடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதைத்தவிர வேறு ஒன்றையும் இந்த செய்ய முடியாது என்பது யதார்த்தமாகும். மஹிந்த ஆட்சியின் வீழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அந்த அந்த இடத்தை ஈடு செய்ய ஐ.தே.க முயற்சி செய்வதுடன் அந்த சந்தர்ப்பம் இடதுசாரிகளின் கைகளுக்கு சென்றுவிடக்கூடாது என்பதில் பிற்போக்கு சக்திகள் கவனமாக உள்ளனர். அதுமட்டுமல்ல சந்தர்ப்பவாத இடதுசாரி கூட்டணிகூட அதே வேலையைத்தான் செய்ய எண்ணுகிறது.

உண்மையும் இருக்கிறது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்குப் பொருளாதார நெருக்கடி தோன்றும் போதெல்லாம் அந் நாடுகளில் தங்கி வாழுகின்ற பின்தங்கிய அடிமை நாடுகள்பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. தற்போது பலம்பொருந்திய முதலாளித்துவ நாடுகளுக்கு "நிமோனியா" காய்ச்சல் பிடித்துள்ளது. அதன்படி இலங்கைப் போன்ற பின்தங்கிய அடிமை நாடுகளில் பொருளாதாரம் "மரணத்தை தழுவுவது" தவிர்க்க முடியாதது.

தற்போழுது பெருத்த பொருளாதார நெருக்கடியில் அமிழ்ந்துப்போயிருக்கும் முதலாளித்துவ அரசாங்கம் கடந்த கால்களில் நாட்டில் ஏற்பட்ட பிரிவினைக்கு எதிரான வெற்றியை தமதாக்கி கொண்டு, யுத்ததில் சிக்குண்ட மக்களை புறம்தள்ளி விட்டு, இனவாதத்தை கூர்மையாக்கி அரசின் பொருளாதார நெருக்கடிகளை மூடிமறைப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு முடியுமாயிருந்தாலும் தற்போது தோன்றியுள்ள சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு விடைகான முடியாது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

உலக முதலாளித்துவம் நெருக்கடிக்குளாளாகியுள்ளது போலவே ராஜபக்ஷ அரசாங்கத்திலும் நெருக்கடி உக்கிரமடைந்து வருகிறது. இலங்கையின் வருமானத்தில் 80/ மானவை வரி மற்றும் அபராதம் விதித்தல் போன்றவற்றில் மூலமாகவே கிடைக்கிறன. அது மட்டுமல்ல நாட்டின் கடன் சுமையென்பது தாங்க முடியாத சுமையாக உள்ளது. அரசாங்கம் முன்னர் பெற்ற கடனுக்கு வட்டியை கொடுப்பதற்கும், தவணைக் கொடுப்பனவுகளை கொடுப்பதற்காகவும் அதிக வட்டிக்கு கடன் பெறுகின்றது. அப்படியிருக்க, அடுத்த ஆண்டுக்காக ஒரு லட்சத்து பதினையாயிரம் கோடி ரூபாய் கடன் பெறுவதற்காக, வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் வாயிலாக அரசாங்கம் முன் மொழந்திருப்பதன் மூலம் நெருக்கடியின் ஆழத்தை புரிந்துக் கொள்ள முடிகிறது.

அதிக வட்டிக்காகப் பெற்ற கடனை வீண் விரயமாக்குவதும், வருமானம் ஈட்டாத வெள்ளை யானைத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதினாலும் கடனிலிருந்து மீள்வதற்கான சந்தர்ப்பததை இழந்து பெரும் நெருக்கடியில் அரசாங்கம் அமிழ்ந்து போயுள்ளது. அதனால் அதற்கு தீர்வாக நிதி அமைச்சுப் பக்கமிருந்து பிரேரணையொன்று முன்மெழியப்பட்டுள்ளதாக தொரிய வருகிறது. அதாவது வெளிநாடுகளிலிருந்து கடன்பெற்று உருவாக்கிய செயற்றிட்டங்களுக்கு கடனை செலுத்துவதற்குப் பதிலாக அக்கடன்காரர்களை அத்திட்டங்களுக்கான முதலீட்டாளர்கலாக மாற்றுவதற்காக குறிப்பிட் நாடுகளுடன் புரிந்துணர்வு மேற்கொண்டாக வேண்டுமென்ற பகிரங்கப் படுத்தபடாத இம் முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்படுமானால் உதாரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீனாவிடமிருந்து பெற்ற கடனை அத்துறைமுகத்தின் முதலீடாக பயன்படுத்தும். அப்படியானால் துறைமுகத்தின் உரிமை சீனாவிற்கு தாரைவார்க்கப்படும். நுரைச்சோலை அனல் மின் நிலையம் தொடர்பாகவும் இவ்வாறான முன்மொழிவு மேற்கொண்டுள்ளதாக அறியமுடிகிறது. இது நடைமுறைபடுத்தப்பட்டாலும் படாவிட்டாலும் இத்தகைய யோசனைகளை கொண்டுவருவதன் மூலம் அரசாங்கத்தின் வங்குரோத்து நிலையை உணரக் கூடியதாக உள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியின் தன்மையினை இம்முறை வரவு செலவுத் திட்டத்திலும் காணகூடியதாக உள்ளது. வரியின் மூலமாகவும், கடன் மூலமாகவும் பெற்றுக் கொண்டு வரவை அமைச்சுக்களுக்கு பகிர்தளிக்கப்பட்டதே தவிர, மக்களுக்கு மானியங்களோ, நிவாரணமோ, இல்லாத வரவு செலவுத் திட்டமாகும். வறுமை, வேலையில்லா பிரச்சினை, போதுமான வருமானம் கிடைக்காமை, வாழ்க்கை செலவு அதிகரிப்பு, மூலமும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் வெட்டப்படுவதன் மூலமும் மகக்ள் மீது பாரிய சுமை ஏற்றப்பட்டு வருகிறது. இந் நெருகக்டிகளை நீண்ட காலமாகவே மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

இந்நெருக்கடிகளை முதலாளித்துவத்தின் நெருக்கடியாக இன்னமும் புரிந்துக் கொள்ளாத போதும் பாரிய நெருக்கடிக்கு தாம் முகம் கொடுக்க போகிறோம் என்பதை உணர்ந்து வருகின்றனர். இவ்வொடுக்குமுறைக்கு எதிரான தனிபட்ட சம்பவங்கள் வாயிலாகவும் தற்செயலான சம்பவங்களுடாகவும் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கிறன.

ஒடுக்கு முறைகளுக்கு எதிரான மக்களின் செயற்பாடுகளை சகித்துக் கொள்ள முடியாத ராஜபக்ஷ அரசாங்கம் ஏனைய முதலாளித்துவ அரசாங்களைப் போலவே மாற்றுக் கருத்துகளை கொண்டுள்ளவர்களையும், பத்திரிகையாளர்களையும் நசுக்கி ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயலில் இறங்கியுள்ளது. அது மாத்திரமல்ல நீதித் துறையிலும் தலையீடுச் செய்து சரத்போன்சேகாவுக்கு தண்டனை வழங்கியமை, சரத் என் சில்வாவுக்கு எதிராக தெரிவுக் குழு அமைக்க எடுத்த முடிவுகள், மக்கள் மிக அருவருப்போடு நோக்குகின்றனர். அதுமட்டுமல்ல, ஊடக அடக்குமுறை, நட்டமடையும் நிறுவனங்களை மீள அரசாங்கம் கையேற்றல், போன்ற சட்டகளின் மூலமாக ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காத நிலைமையே தொடர்கின்றது.

தற்போதைய அரசாங்கமானது காடைத்தனம் ஜனநாயகத்தை மதிப்பளிக்காத போக்கும் கொண்ட மாபியாக் குழுவின் கூடாரமாகத்தான் தென்படுகிறது.

வலுவேறாக்கம் என்பது ஜனநாயகத்தின் சீறிய பன்பாகும். ஆனவ ராஜபக்ஷ அரசாங்கமோ நீதி, நிதி,நிர்வாகம் என்ற மூன்று வலுக்களையும் தன்னகத்தே வைத்துக்கொண்டு தமது வர்க்க நலன் சார்ந்த தேவைகளுக்காகவே அவற்றை பிரயோகிப்பதை மக்களால் அனுமதிக்க முடியாது.

முதலாளித்துவத்தின் இருப்பை தக்க வைப்பதற்காக ஏகாதிபத்தியவாதிகளோடு இணைந்து பல்வேறு வழிகளில் இந்த நாட்டிலுள்ள உழைக்கும் மக்களுக்கு துரோகமிழைக்கும் வகையில் தம்வசமுள்ள அனைத்து வளங்களையும் பாவிப்பதை உணரக்கூடியதாகவுள்ளது.. நீண்ட காலமாக எதிர்கட்சி வரிசையில் இருக்கும் ஐக்கிய தேசிய கட்சியானது வடுமோசமான சந்தர்ப்ப வாதத்தையும் ஏகாதிபத்திய விசுவாசத்தையும் கொண்ட கட்சியாகும்.

நாளுக்கு நாள் பருந்துக்கு இறையான கோழிக்குஞ்சுகளைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு விலை போன பின்பு மிகக்குறைந்த குஞ்சுகளோடு நடமாடும் கோழியாக ரணில் விக்கிரமசிங்க இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஏதிர்க்கட்சி ஆசனத்தை தக்க வைப்பதற்க்க முடியாத சூழ்நிலையினை கானக்கூடியதாவிருக்கிறது.

இதுதான் இலங்கை இடதுசாரிகளின் சாபக்கேடாகவ்கூட அவதானிக்ககூடியதாகவுள்ளது.

முதலாளித்துவ சந்தர்ப்பவாத கூட்டணி ஒருபுறம் இடதுசாரி சந்தாப்பவாதிகளின் கூட:டு மறுபுறமும் இருப்பதை அவதானிக்கதக்கது. இந்த இரண்டின் வலையிலும் விழுந்துவிடாது சரியான இடது பாதையில் செல்வதற்கு பாட்டாளி மக்களை வழி நடத்துவது மக்கள் விடுதலை முன்னணியின் கடமையுமாகும். ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்பட்டுவரும் அரசாங்கத்தால் மேலும் மேலும் கடன் பெறுவதைத் தவிர நாட்டையும், நாட்டு மக்களையும் விற்பதைத் தவிர, கல்வியைத் தனியார்மயப்படுத்தி, மக்கள் நலன்சார்ந்த சேவைகளை நலிவடையச்செய்து மக்கள் மீது சுமைகளை ஏற்றி அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதைத்தவிர வேறு ஒன்றையும் செய்ய முடியாது என்பது யதார்த்தமாகும்.

மஹிந்த ஆட்சியின் வீழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அந்த அந்த இடத்தை ஈடு செய்ய ஐ.தே.க முயற்சி செய்வதுடன் அந்த சந்தர்ப்பம் இடதுசாரிகளின் கைகளுக்கு சென்றுவிடக்கூடாது என்பதில் பிற்போக்கு சக்திகள் கவனமாக உள்ளனர். அதுமட்டுமல்ல சந்தர்ப்பவாத இடதுசாரி கூட்டணி கூட அதே வேலையைத்தான் செய்ய எண்ணுகிறது. எனவே முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டம் போன்றதே எதிர்ப்புரட்சிக கும்பலுக்கு எதிரான போராட்டமாகும். ஆந்த இடதுசாரித்துவத்தில் ரோஹணவிஜேவீரவின் கோட்பாட்டுடன் இணக்கமில்லாதவர்களும் இணைந்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது. இவ்வணி ஜே.வி.பிக்கு எதிரானதாகும். முதலாளித்துவத்தை கொண்டு செல்லும் சுக்கானை தமது கையில் எடுத்துக்கொண்டு ஏகாதிபத்திய வாதிகளின் நலன்களுக்கேற்ப இலங்கை முதலாளித்துவத்தை வழிநடத்த என்னும் பணியைப்போன்றே இடதுசாரித்துவத்தின் முகத்ரைதக்காட்டி துரோகிகளையும், சதிசூழ்ச்சிகாரர்களையும் இணைத்து உருவாக்கப்படும் கூட்டணியானது எதிர்ப்பரட்சிக்கு உதவுமேயன்றி உண்மையான இடதுசாரித துவத்தை உருவாக்க முடியாது.

ஏவ்வறாயினும் தோன்றியுள்ள இந்த நிலைமைகள் உண்மையான இடதுசாரிகட்சியான மக்கள் விடுதலை முன்னணிக்கு சவாலாகவே அமையும். இதிலுள்ள சவால் என்னவென்றால் முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்து உழைக்கும் வர்க்கத்தை சபலப்படுத்துவதோடு அதி தீவிர இடதுசாரித்துவம் பேசிக்கொண்டு செயல்படுவதன் மூலம் ஏற்படும் ஆபத்து பற்றியதாகும். இது தொடர்பாக விழப்பாக இருப்பதன் மூலம்தான் மக்கள் விடுதலை முன்னணி திறம்பட செயல்பட முடியும். வெற்றிக்கொள்ள முடியும்.

இப்படியான போலியான இடதுசாரி பிளவுகள் இலங்கை அரசியலுக:கு ஒன்றும் புதியதல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தோட்டத் தொழிலாளர்களின் EPF நிதிக்கு வேட்டு!




அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் சுமார் 12 தோட்டங்களில் உள்ள 6000 தொழிலாளர்கள் தமக்கு வழங்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதியை இழக்கும் நிலையில் உள்ளனர்.
அதாவது 6000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட அல்லது வைப்பிலிடப்பட வேண்டிய தொகையான
சுமார் 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை இதுவரையும் வைப்பிலிடப்படாமல் உள்ளதாக அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெறிவிக்கப்படுகிறது.
இந்த நிதியானது 2001ம் ஆண்டு முதல் வைப்பிலிடப்படவில்லையென அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த நடவடிக்கையானது ஊழியர் சேமலாப நிதி சட்டத்தை மீறும் ஓர செயலாகும். குறிப்பிட்ட இரண்டுமாத இடைவெளிக்குள் பணம் வைப்பிலிடப்பட வேண்டும். ஆனால் 10 வருடங்கள் கடந்தும் இன்னும் வைப்பிலிடப்படாமல் தொழிலாளர்களை ஏமாற்றுவது ஏன் என்ற கேள்வி எழும்புகிறது.
மக்களின் நலன்களின் மீது அக்கறைக்கொள்ளாத அரசாங்கம் தொழிலாளர்களின் சேமலாப நிதியிலும் கை வைப்பதும் மக்களின் நலனுக்காகவே என்று மலையாகத் தலைமைகள் நினைக்கின்றார்கள் போலும். அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இதே கண்மூடி வித்தையை கம்பனிகள், தனியார் நிர்வாகிக்கும் தோட்ட நிர்வாகங்கள் கையாளுகின்றன. நமுனுகல பிளான்டேசன் நிர்வாகிக்கும் சில தோட்டங்களில் இது போன்ற நிலைமைகள் கடந்த காலத்தில் கானப்பட்டது. அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொள்ளும் இந்த நிலைமைகளை கண்டும் கானாத மலையக தலைமைகள் அரசாங்கத்துக்கு சாமரை வீசுகின்றனர்.

## மூடப்படும் தேயிலைத் தொழிற்சாலைகள்


மூடப்பட்டுள்ள பத்தேகம தோட்ட தேயிலைத் தொழிற்சாலை


உள்ளலாச பயணத்துறைக்கு விடப்பட்டுள்ள கந்தப்போல தேயிலைத் தொழிற்சாலை

தேயிலைத் தொழில்த்துறை வளர்ச்சியில் பாரிய சரிவு ஏற்றட்டதையடுத்து தோட்டத்தை நிர்வாகிக்கும் கம்பனிகள் தேயிலை தொழிற்சாலைகளை தொடர்ச்சியாக முடியும் குத்தகைக்கு விட்டும் வருகின்றன. குறிப்பாக 2007ம் ஆண்டுக்குப்பின்னர் பதுளை மாவட்டத்தில் 20க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளும், நுவரெளியா மாவட்டம் உட்பட நாட்டின் ஏனைய மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் 10/ மான தொழிற்சாலைகள் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெறியவருகிறது.
தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதால் அதில் தொழில் புரியும் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை தோன்றியுள்ளதோடு தொழிற்சாலையில் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் தெறியவருகிறது.

## தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தேயிலைத்தூள் இடைநிறுத்தம்



தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுவந்த டர்ஸ்ட் தேயிலைத் தூளை தோட்ட நிர்வாகங்கள் இடைநிறுத்தியுள்ளதாக தெறியவருகிறது. குறிப்பாக இடைநடுவில் தோட்ட சேவையில் இருந்து ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கே இவ்வாறு நிறுத்தியுள்ளதாக தோட்ட நிர்வாகங்கள் கூறுகின்றன.
குறிப்பாக தொழிலாளர்கள் சேவையில் நிறந்தரமாக்கப்பட்டப் பின்னர் அவர்களுக்கு சகல தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து சேவைகளும் உரித்துடமையாகும். அவ்வாறு உரித்துடைய சில உரிமைகள் மீறப்படும் போதும், வழங்கப்படும் சலுகைகள் நிறுத்தப்படுவதும், நிவாரனங்கள் வெட்டப்படுவதும் மனித உரிமை மீறலாகும். அவ்வாறானதோர் மீறல் நடவடிக்கையில் தோட்ட நிர்வாகங்கள் இறங்கியுள்ளது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

# தேயிலைத் தோட்டக் காணிகள் தனியாருக்கு ஏலம்!


விற்பதற்கு தயாராவிருக்கும் அகலவத்த மத்துகம தோட்டம்


பசறை லுனுகலை தோட்டம்

தற்போது கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள தேயிலைத் தோட்ட கானிகளை வெளிநாட்டு நிருவனங்களுக்கும், தனியாருக்கும் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நட்டத்தில் இயங்கும் நிருவனங்களில் தேயிலைத் தோட்ட தொழிற்றுறையும் ஒன்றாகும். நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு ஏதுவான சட்டமூலத்தையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.
அதன் பிரதிபலனாகவே தற்போது தேயிலைத் தோட்டங்கள் விற்பனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொனராகலை மாவட்டத்தில் கும்புக்கன், பாலாறு போன்ற பிரதேசங்கள் பதுளை மாவட்டத்தில் மஸ்கெலியா நிருவனம் நிர்வாகிக்கும் சில தோட்ட கானிகள், நுவரெலியா மாவட்டத்தின் சில தோட்டங்கள் விற்பதற்கும், குத்தகைக்கு விடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மஸ்கெலியாவில் மஸ்கெலியா நிறுவனம் 325 ஏக்கர் தேயிலைக்கானி, தொழிற்சாலை, பங்களா மற்றும் நாளாந்தம் சுமார் 5000 கி.கி பச்சைத் தேயிலை பறிப்பதற்கு சாதகமான கானியை 160 மில்லியன் ரூபாவிற்கு விற்பதற்கு இணைய தளத்தில் விளம்பரம் படுத்தியுள்ளது.அத்துடன் தொட்டகலையில் 47 ஏக்கர் தேயிலைத் தோட்டக்காணி பேர்ச் ஒன்று 1.5 மில்லியன் ரூபாவிற்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த தோட்டத்தில மாதாந்தம் 14500 கிலோ கிராம் பச்சைத்தேயிலைக்கொழுந்தும் சராசரியாக பறிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## தோட்டப்பகுதி வீடமைப்பு என்னும் போர்வையில் தேயிலைத் தோட்டங்களுக்கு மூடுவிழா

தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுப்பதாக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனை நிறைவேற்றப் போவதாகவும் தோட்டங்களில் சில தொழிற்சங்கள் கூறப்பட்டு வந்த தற்போது நிறைவேற்றப்பட்டுவருகிறது. தேயிலைத் சந்தையில் விலை வீழச்சியின் காரணமான நிர்வாகங்கள் தோட்டங்களை பராமரிக்காது. கைவிடும் நிலையில் உள்ளதை அவதானிக்கும் அரசாங்கத்துக்கு சார்பான தொழிற்சங்கங்கள் கம்பனிகளுடன் சமரசம் பேசி தேயிலை நிலங்களை தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.
தற்போது நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ளும் தேயிலைத் தொழிற்றுரை, மற்றும் கானிகள் விற்பனை என்பவற்றின் எதிர்ப்பை தவிர்ப்பதற்காகவும் இவ்வாறான திட்டமிட்ட நடவடிக்கைகளை சில தொழிற்சங்கங்கள் மேற்கொள்வதாக தெறியவருகிறது. வீடமைப்புத்திட்டம் என்னும் போர்வையில் தேயிலை பிடுங்கும் நடவடிக்கை அநேக தோட்டங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.

## ஜே.வி.பி யால் தோட்ட மக்களுக்கு மின்சார இணைப்பு



குறைந்த வருமானம் பெறும் பதுளை மாவட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு மின்சார இணைப்பை மக்கள் விடுதலை முன்னணி வழங்கியுள்து. கடந்து 2010ம் ஆண்டும் பசறை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 14 தோட்டத் தொழிலாளர்களுக்கும் அப்புதலை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மின் இணைப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது..
2011ம் ஆண்டுக்காகவும் பதுளை மாவட்டத்தைச் சேந்த தொழிலாளர்களுக்கு மின்சார இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. அத்துடன் குறைந்த வருமானம்பெறும் தொழிலாளர்களுக்கு சுயதொழில் ஊக்கவிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கிறது.

## கேகாலை பிளாண்டேசன் நிர்வாகிக்கும் தோட்டங்கள் குத்தகை போர்வையில் விற்பனைக்கு



கேகாலை பிளாண்டேசனால் நிர்வாகிக்கப்படும் தோட்டங்களை உப குத்தகை என்ற போர்வையில் தனியாருக்கு விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக தெறியவருகிறது. அதன் எதிரொலியாக தோட்டங்கள் பராமரிக்கப்படுவதோ, தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரி சேவைகள் பாதுகாக்கப்படுவதோ கைவிடப்பட்டுள்ளதாக தெறியவருகிறது.
தற்போது உடப்புஸ்ஸலாவ பிரதேசத்தை மையப்படுத்தியிருக்கும் தோட்டங்கள் விற்கப்பட்டுள்ளதாக தெறியவருவதோடு குறிப்பாக கோடன், ஹோல்டிமார், எமஸ்ட், கிரெஸி, வன்ஹோல்மார், கீரியகொல, தும்புவத்த, செல்வகந்த ஆகிய தோட்டங்கள் இவ்வாறான பாதிப்புக்கு முகங்கொடுத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் ரோஹண

# பாதையை திரிபுபடு

௨௨வது கார்த்திகை வீரர்கள் தினத்தை முன்னிட்டு 13 நவம்பர் ௨௦11 கொழும்பு விஹா



இன்றைக்கு 22 வருடங்களுக்கு முன்னர் இதுபோன்ற காரிருள் சூழ்ந்த நாளில் உங்களிடமிருந்தும் எங்களிடமிருந்தும் பறித்துக் கொள்ளப்பட்ட நமது கட்சியின் ஸ்தாபகர், நமது தலைவர் தோழர் ரோஹண விஜேவீர உள்ளிட்ட தோழர் தோழியரை நினைவு கூறுகின்ற நாள் இன்றாகும்.

1989க்குப் பின்னர் கடந்த ஒவ்வொரு வருடமும் நாம் எவ்வளவு கஷ்டங்களை எதிர்கொண்ட போதிலும், எவ்வளவு தடைகளை எதிர்கொண்ட போதிலும் இந்நாட்டின் புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவதற்காக போராடி நாட்டிற்காக உயிர் நீத்த சகல சகோதர சகோதரிகளையும் நினைவு கூறுவதை நாம் கைவிடவில்லை. 1994 இல் பகிரங்க அரசியலுக்குள் நாம் பிரவேசித்த பின்னர் எமது தோழர் தோழியர்களை ஒன்றுதிரட்டி கார்த்திகை வீரர்களை நினைகூர்ந்தோம். இன்றும் நினைவு கூருகின்றோம்.

எம் முன்னால் சவால்கள் நிறைந்து காணப்பட்ட போதிலும் எந்தவொரு நிலைமையிலும் கார்த்திகை வீரர்களை நினைவு கூறும் நமது கடமையை நாம் சரிவரவே நிறைவேற்றியுள்ளோம்.

இன்று 22 வது கார்த்திகை வீரர்கள் தினத்தில் நமது தாய், தந்தையர், சகோதர, சகோதரிகள் அனைவரும் ஒன்று கூடியுள்ளோம். 21வது கார்த்திகை வீரர்களை நினைவு கூரும்போது இவ்விடத்திற்கு வருகைத் தராத யாழ்ப்பாணம், கிளிநொச்சியை சேர்ந்த சகோதார்கள் இம்முறை ஒன்று கூடியிருப்பது விஷேட அம்சமாகும். மட்டகளப்பு அம்பாறையிலிருந்து முஸ்லிம் சகோதார்கள் இவ்விடத்திற்கு வருகை தந்துள்ளார்கள். அது எமக்கு பெரும் பலமாகும். கார்த்திகை வீரர்கள் நினைவு தினத்தை பிரித்து துண்டாடுவதற்கு எதிரிகள் திட்டமிட்டுள்ளபோதும் வரலாற்றில் என்றுமில்லதவாறு பாரிய மக்கள் கூட்டம் விஹரமாதேவி பூங்காவிற்கு திரண்டுள்ளனர். நமது கார்த்திகை வீரர்கள் சென்ற பாதையை வெற்றியடையச் செய்வதற்கு அணிவகுத்துள்ளனர். திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இதன்போது எம் முன்னால் வரும் எந்தவொரு சவால்களையும், எந்தவொரு சதி சூழ்ச்சிகளையும் தோற்கடிப்பதற்கு ஓரணியில் திரண்டுள்ளளோம் என்ற செய்தியை அறிவிக்கின்றோம். இதற்கு வலுச் சேர்க்கவே நாம் சூழ்ந்துள்ளோம். இன்று விஹரமாதேவி பூங்காவில் இடம் போதாது. அது எப்படியான நேரத்தில்? முதலாளித்துவ ஊடகங்கள் மக்கள் விடுதலை முன்னணி பிளவு பட்டுள்ளதைப் பற்றி பேசும் நேரத்திலாகும். சிலர் மக்கள் விடுதலை முன்னணி கலைந்து விட்டது என்று பேசும்போது மக்கள் கூட்டம் இரட்டிப்பாகி கார்த்திகை வீரர்களை நினைவுகூருகிறது. இலங்கையின் அரசியலுக்கு உண்மையான இடதுசாரி இயக்கத்தை அறிமுகப்படுத்திய சோஷலிச சமூக மாற்றத்திற்காக மக்களை அணிதிரட்டிய, அந்த மக்களை வழிநடத்திய எவராலும் தோற்கடிக்க முடியாத பிரம்மாண்டமான அரசியல் இயக்கத்தை நிர்மாணித்துக் கொடுத்த சகல தோழர் தோழிகளையும் இன்று நினைவு கூறுகின்றோம். நாம் என்றென்றும் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்கின்றோம். படிப்பினைகளை பெற்றுக் கொண்டோம். தைரியத்தை திரட்டிக் கொண்டோம். நாம் ஒவ்வொரு நாளும் அவர்களிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டேயிருக்கின்றோம்.

மக்கள் விடுதலை முன்னணி ஒவ்வொரு நாளும் சவால்களுக்கு முகம் கொடுத்த கட்சியாகும். 1965ம் ஆண்டில் தோழர் ரோஹண விஜேவீர இந்தக் கட்சியை நிர்மாணித்து கடந்து சென்ற 46 வருடங்களாக நாம் ஏராளமான சவால்களை எதிர்கொண்டோம். அவை பெரிய, சிறிய சவால்களாக இருந்தது. அப்படியான ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தோழர் ரோஹண விஜேவீர தலைமை தாங்கிய போதும் அதன் பின்னரும் வந்த சவால்களை நாம் வெற்றிகொண்டுள்ளோம். மக்கள் விடுதலை முன்னணிக்கு வெல்ல முடியாத சவால்கள் இந்தச் சமூகத்தில் இல்லை. தோழர் ரோஹண விஜேவீர உள்ளிட்ட நமது கட்சியின் தலைவர்கள் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டு 22 வருடங்கள் கடக்கின்றன. கடந்துச் சென்ற அக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி ஒரு நீண்ட பயணத்தை கடந்தே வந்திருக்கிறது. பலவிதமான அரசியல் முடிவுகளை எடுத்திருக்கின்றது. அரசியல் ரீதியான பல தந்திரோபாய மூலோபாயங்களை எடுத்துள்ளது. அவைகளில் வெற்றியும் இருக்கின்றது. அதேபோன்று பின்னடைவும் இருக்கிறது. நாம் செய்த பல வெற்றி பணிகள் இருக்கின்றது. அதேபோன்று இனங்காணக் கூடிய பல குறைபாடுகளும் இருக்கின்றது. இவ்வாறாக தமது வரலாற்றை திரும்பிப் பார்த்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு சரியான பாதையில் செல்வதற்கு கற்றுக் கொடுத்தவர் தோழர் ரோஹண விஜேவீரவாகும்.

அன்று 1989 இல் இருந்த தேசபக்தியான மக்களின் போராட்டத்தை முதலாளித்துவ அரசாங்கம் நேரடி மற்றும் மறைமுக இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அடக்குமுறைச் செய்ததுடன் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னால் பாரிய சவால் உருவெடுக்கவழிசெய்தது. அந்தச் சவாலானகால கட்டத்தில் கட்சியை நிர்மாணித்து தலைமைத் தாங்கிய ரோஹண விஜேவீர இல்லாத சந்தர்ப்பத்திலாகும். மக்கள் விடுதலை முன்னணியை முன்கொண்டுச் செல்லும் சவால் உருவானது. இன்று சிறிய சிறிய தடைகள் குறைபாடுகள் உள்ளபோதிலும் 1994க்கு பின்னர் தோழர் விஜேவீர இல்லாத பின்புலத்தில் மக்கள் விடுதலை முன்னணியை வெற்றியை நோக்கி கொண்டுச் செல்லும் சவால் இருந்தது. நாம் 94 இல் இருந்து இது நாள்வரை கட்சியை வளாத்து நட்டிற்கும் மக்களுக்கும் பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம் அதேபோன்று உள்ளக வெளியிலும் எந்தவொரு எதிரிக்கும் உடைக்க முடியாத, பிரிக்க முடியாத கட்சியை நிர்மாணித்து இன்றுவரையில் முன்னொக்கி கொண்டு வந்திருக்கின்றோம். அந்த முதலாவது சவாலை நாம் வெற்றிக் கொண்டுள்ளளோம்.

இப்போது இன்னுமொரு சவால் இருக்கிறது. அதுதான் தோழர் ரோஹண விஜேவீரவின் அரசியலை திரிபுபடுத்துவதற்கு, கொள்ளையடிப்பதற்கு இடமளிக்காமல் அதை பாதுகாக்கும் சவாலாகும். இப்போது சிறிய கொள்ளைக் கூட்டமொன்று தோன்றியுள்ளது. அவர்கள் ஆரம்பத்திலேயே சிறிய சிறிய பொருட்களை களவாடியதன் மூலமாகவே தமது செயலை ஆரம்பித்தனர். இப்போது இவர்கள் தோழர் ரோஹண விஜேவீரவின் அரசியலை கொள்ளையடிக்க ஆரம்பித்துள்ளனர். பௌதீக பொருட்களை கொள்ளையடித்தால் பரவாயில்லை. அவைகளை தேடிக் கொள்ள முடியும். ஆனால் அரசியல் ரீதியாக தோழர் ரோஹண விஜேவீரவின் அரசியலை கொள்ளையடித்து தமக்கு பொருத்தமான முறையில் அர்த்தம் கற்பிக்க முயற்சிப்பார்களானால்,அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எப்போதும் தோழர் விஜேவீரா பிரிவினைவாதத்திற்கு எதிராக தேசிய பிரச்சினையின்போது இலங்கையில் மார்க்ஸிச நிலைபாட்டை நிலைநிறுத்தியவர். தோழர் ரோஹண விஜேவீரவை நிந்திக்கதக்க முறையில் பிரிவினைாதத்திற்கு சார்பான முறையில் மாற்றியமைக்க முற்படுவார்களானால் தோழர் விஜேவிராவை சந்தர்ப்பவாத . கோஷ்டி கும்பலுக்கு தேவையான முறையில் சந்தர்ப்பவாதியாக பயன்படுத்த முயற்சிப்பார்களானால் அதோ அந்த முயற்ச்சியை உயிர்நீத்தாவது போராடி தோற்கடித்து அந்த உண்மையான தத்துவத்தை பாதுகாக்கும் சவால் எம் முன்னால் உள்ளது. அதை நாம் கட்டாயமாக தோற்டித்தே தீருவோம். கொள்ளை கூட்டத்திற்கு கொள்ளையிட கொடுக்க முடிவது அவைகளை அல்ல. அவர் எவருக்கும் தோழர் ரோஹண விஜேவீராவின் தத்துவத்தை கொள்ளையடிக்க இடமளியாது பாதுகாப்பதற்கு நாம் தயார். என்ன சவால் வந்தாலும் அதை நாம் செய்தே தீருவோம்.

இப்போது இந்த சிறிய கொள்ளை கூட்டத்திற்கு பதில் அளிப்பதை ஒதுக்கிவிட்டு நாம் தோழர் ரோஹண விஜேவீராவிடம் கற்றுக் கொண்டவைகள் இருக்கிறது. பல்வேறு வாத பிரதிவாதங்கள் இருந்த பின்புலத்தில் உள்ளன. தோழர் ரோஹண விஜேவீர நமது நாட்டில் உண்மையான மார்க்ஸஷ லெனினிஸவாதியாகத் திகழந்தார். இம்மண்ணில் மார்சஸீஷலெனின்வாதத்தை சரியாக நிலை நிறுத்திய முதலாவது நபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ண விஜேவீரவின்
# டுத்த இடமளியோம்

ஹராமாதேவி திற்நத வெளி அரங்கில் தோழர் டில்வின் சில்வா ஆற்றிய உரையின் ஒரு பகுதி



தோழர் ரோஹண விஜேவீரவாகும். தோழர் ரோஹண விஜேவீரா றொஸ்கிவாதியாகவே மாவோவாதிகவோ ஆக முற்படவில்லை. ஸ்டாலின்வாதியாக போகவில்லை. இப்போது றொஸ்கி மீது ஆசையுள்ள கும்பல் தோழர் விஜேவிராவை றொஸகி வாதியாக மாற்ற முற்படுகின்றனர். ஆனால் உண்மையில் தோழர் விஜேவீர உண்மையான மார்க்ஸீஷ லெனின் வாதியாவார். அதை இம்மண்ணில் நடைமுறைபடுத்தி தெளிவுடன் செயற்பட்டார்.

மார்க்ஸிசம் தோன்றியது முதலாளித்துவத்தின் ஆரம்ப கட்டதிலாகும். முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்திற்கு சென்ற பின்னர் ஏகாதிபத்திய கட்டத்தில் மார்க்ஸசத்தை பொருந்தியவர் லெனினாகும். அதனால் இக்கால கட்டத்தில் மார்க்ஸய லெனின் வாதத்தால் நமது நாட்டில் இடதுசாரி இயக்கத்தை பொருந்தியவர் தோழர் ரோஹண விஜேவீராவாகும். அந்த அறிவை நாம் தொடர்ச்சியாக கொண்டுச் செல்லும் தேவையிருக்கிறது. அதேபோன்று தோழர் விஜேவீரா நல்லதொரு கம்யூனிஸ்ட் வாதியாவார். தனிபட்ட நோக்கங்கள் அவரிடம் இருக்கவில்லை.

ஆனால் எமக்குத் தொயும் முதலாளித்துவத்தினுள் கம்யூனிஸ்ட்வாதிகள் பிறக்க மாட்டார்கள். எந்தவொரு வைத்திய சாலையிலும் கம்யூனிஸ்ட்வாதி பிறக்க மாட்டார். தாயமார்களுக்கு முதலாளித்துவத்தின் உள்ளேயே குழந்தைகள் பிறக்கிறது. அந்த பிள்ளையை கம்யூனிஸ்ட்வாதியாக மாற்ற 1965ம் ஆண்டு தோழர் ரோஹண விஜேவீர ஆரம்பித்த கட்சியை பாடசாலையாக்கினார். அதேபோன்று தோழர் ரோஹண விஜேவீரா சர்வதேசவாதியானார். ஆனால் சர்வதேசவாதியானது தாயகத்தை நேசிக்காதவராக அல்ல. தாயகத்தை நேசிக்கும், அதன் விடுதலையை நம்புகின்ற தேசப்பற்றையும் சர்வதேசியவாதத்தையும் ஒன்றிணைத்த ஒரே ஒரு கம்யூனிஸ்ட்வாதி தோழர் ரோஹண விஜேவீராவாகும். சிலர் இருக்கிறார்கள், கம்யூனிஸத்திற்கு விருப்பம் சர்வதேசியவாதி ஆனால் நாட்டை நேசிக்க மாட்டர். தோழர் ரோஹண விஜேவீர நாட்டையும் உலகத்தையும் நேசித்த சர்வதேச கம்யூனிஸ்டவாதியானார்.

***தோழர் சோமவன்ச***

தோழர் விஜேவீர நல்ல ஆர்பாட்டகாரர், நல்ல அமைப்பாளர், நல்லதொரு பிரச்சாரகாரர். நமது வர்க்கத்திற்கு அமைப்பு இருக்கவில்லை. 1965க்கு முன்னர் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவத்துடனேயெ சேர்ந்திருந்தது. அந்த வர்க்கத்திற்கு அமைப்பை உருவாக்கினார். அதன்போது பொல்ஷெவிக் அமைப்புக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் கட்சி அமைப்புகளை கட்டியெழுப்பினார். அந்த அமைப்பு அடிப்படையை மீறியோர்தான் தோழர் ரோஹண விஜேவீரவின் மரபுரிமையை பகிர்ந்துக் கொள்ள முயற்ச்சி எடுத்து வருகின்றனர். அரசியல் இயக்கத்திற்கு அமைப்பு அத்தியாவசியமானதாகும். லெனின் சுட்டிகாட்டியது போல் "அதிகாரத்திற்காக செய்யும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கு அமைப்பைத் தவிர வேறு ஆயுதம் கிடையாது" என்று கூறியுள்ளார். அந்த அடிப்படையை உடைத்து கோஷ்டி கும்பல் இடதுசாரித்துவத்தை பற்றிப் பேச முடியாது. லெனின்வாதியாக முடியாது. மார்க்ஸீஷ வாதியாக முடியாது. றொஸ்கிவாதிகளாக முடியும். றொஸ்கிதான் குழு கும்பலுக்கு இடமளித்தவராவார்.

தோழர் வி[illegible] தத்துவத்தை நடைமுறைக்கு பயன்படுத்தினார். அதனால் தோழர் விஜேவீர ஒருபோதும் புத்தக புளுவாக இருக்கவில்லை. மனனம் செய்தவற்றை சொல்லிக் கொண்டிருக்கவில்லை. புடித்தவற்றை நடைமுறயில் செயற்படுததிக் காட்டினார். சுலோகங்களை சொல்லிக் கொண்டு புரட்சியின் வாய்விச்சுகளை சொல்ல விருப்பமுள்ளோர் உளள்னர். தோழர் விஜேவீர நடைமுறையில் செய்வதற்காக திஸ்ஸமாராமை நகரில் மூட்டை தூக்கி கட்சியை வளர்த்தெடுகக் காசு தேடினார். சுலோகங்களை உசச்ரித்துக் கொண்டிருக்கவில்லை. செயலுக்கு இறங்கினார். இன்று பல்வேறு விதத்தில் வார்த்ததைகளை உச்சரிப்போர் பற்றி பேசுவதற்கு எடுத்த காலம் போதுமானது அதனால் நடைமுறையைப் பற்றி பேசுவது முக்கியமானதாகும். நடைமுறைக்கு பயன்படாத தத்துவம் பிரயோசனமில்லை. தத்துவம் இல்லாத நடைமுறையும் பிரயோசனமில்லை. தோழர் ரோஹண விஜேவீர நமது நாட்டில் உண்மையான தததுவத்தையும் நடைமுறயையும் ஒருங்கிணைத்தார். இம்மண்ணில் வளர்தெடுத்தார். மக்களுக்கு புரியும்படி இலகுவான மொழியில் தத்துவத்தை சொல்லிக் கொடுத்தார். ஆழமான சொற்களை பயன்படுத்தினால் பெரிய சக்தி உள்ளது போன்று தெரியும். அது பிரயேசனமற்றது. தோழர் விஜேவீர 05 வகுப்புகளை அறிமுகப்படுத்தியது மக்களுக்கு இலகுவான முறையில் அரசயலை சொல்லிக் கொடுப்பதற்காகும். அந்த 05 வகுப்புகள் இந்நாட்டில் மாபெரும் சக்தியாக மாறவில்லையா? இரண்டு தடவைகளும் தமது நோக்கத்திற்காக தாங்களது வாழ்க்கையை அற்பணிக்கும் மனிதர்களை உருவாக்க வில்லையா? தோழர் ரோஹண விஜேவீர மக்களுக்கு முதற் தடவையில் தத்துவத்தை கற்றுக் கொடுக்க செல்லவில்லை. பொருளாதார நெருக்கடி சமூக வாழ்க்கையின் நெருக்கடிகளை பற்றி சொல்லிக் கொடுத்தார். அதன் பின்னர் தத்துவத்தைப் பற்றி சொல்லிக் கொடுத்தார். அதேபோன்று நமது நாட்டில் வர்க்க முரண்பாட்டை இனங்கண்டார். அது வர்க்கத்தின் பொருத்தமற்ற பகுதிகளை புறம் ஒதுக்கிவிட்டு பொருத்தமானவற்றை சோஷலிச நடைமுறைக்கு பயன்படுத்தினார். இந்நாட்டு தொழிலாள வர்க்கத்தை மத வழிபாடுகளை விட சோஷலிசத்தை நேசிப்போராக வளர்த்தெடுத்தார். அதனால் மக்கள் விடுதலை முன்னணி சோஷலிச தொழிலாளர் சங்கம், சோஷலிச இளைஞர் சங்கம், போன்றே சோஷலிச பிக்குகள் சங்கத்தையும் உருவாக்கினார். நமது நாட்டில் அரசியல்வாதிகள் பிக்குமார்களை தமது அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது அவர்களை சோஷலிச நோக்கத்திற்காக பயன்படுத்தினார். அதற்காக அவர்களை வென்றெடுத்தார். நாம் நமது நாட்டின் கலாசாரத்தை கருத்தில் கொள்ளாது அவைகளோடு கலந்திருக்காது, சைபர் உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டு சுலோகங்களை உச்சரித்துக் கொண்டு செய்யமுடியாது. பெரும்பான்மையான மக்களின் விருப்பதுடன் சோஷலிசத்தை வென்றெடுக்க செயற்பட வேண்டும். இன்று தோழர் ரோஹண விஜேவீராவின் படத்தை பின்பக்கம் வைத்துக் கொண்டு இருப்போருக்கு இது புரியாது. அவர்கள் தோழர் ரோஹண விஜேவீராவை திரிபுபடுத்த முயற்சிக்கின்றனர்.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி இம்மண்ணில் அரசியல் செய்வது தோழர் ரோஹண விஜேவீர சொல்லிக் கொடுத்த சரியான கண்ணேட்டத்திலாகும். 1982ல் ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்சிசாரா பொது வேட்பாளரை நிறுத்த தோழர் விஜேவீரா முயற்சித்தார். அந்த முயற்ச்சி ஜே.ஆர். ஜயவர்தனாவின் எதேச்சதிகார துஷ்டத்தனமான போக்கை முறியடிப்பதற்காகும். அதிலிருந்து கூறுவதாவது இடதுசாரி கொள்கையை கைவிட்டோம் என்றல்ல. கூட்டமைப்பு, ஐக்கிய நடவடிக்கைகள் மூலமாக வெற்றிகளை பெற்றுக் கொள்வதற்கேயாகும். வெறுமையான வெற்றிகள் அல்ல அடிப்படை கொள்கையிலிருந்து விலகாத சோஷலிசத்தை வென்றெடுப்பதற்காகும். சரியான கொள்கையில் சரியான தத்துவத்திலிருந்து தந்திரோபாயங்களை தேர்ந்தெடுத்தார். "ஸ்ரீ.ல.சு.கட்சியின் பயணத்தின் முடிவு" எனும் தலைப்பில் நாடு முழுவதிலும் கருதரங்குகளை நடத்தியது அதன் அடிப்படையிலாகும். சரியான தந்திரோபாயங்களை கையாண்டு கட்சியை பலப்படுத்தினார். மக்களை அமைப்பு ரீதியாக திரட்டினர்.

முதலாளித்துவ முறை பாரிய நெருக்கடிக்குள் அமிழ்ந்துப் போயுள்ளது. இந்த உலகத்தில் இடதுசாரி இயக்கத்திற்கு இல்லாத அனுபவங்கள் நமது நாட்டிற்கு இருக்கிறது. முதலாளித்துவ நெருக்கடியிலிருந்து சோஷலிசத்தை நோக்கி செல்வதற்கு உலகத்தில் பல நாடுகளுக்கு முடியாது இருக்குபோது நமக்கு அதற்காக ஸ்தாபனமயப்பட்ட கட்சியொன்று இருக்கிறது. அதனால் இந்த போராட்டத்தை எதிரிகளால் வெல்ல முடியாது. மக்கள் விடுதலை முன்னணியின் முன்னால் இருக்கும் எந்தவொரு சவால்களையும் தோற்கடித்து சோஷலிசத்தை வென்றெடுக்கும் நோக்கத்தை நாம் வெற்றிபெறுவோம். மக்கள் விடுதலை முன்னணி கறைந்துப் போகவில்லை. அது இருமடங்காகியுள்ளது. அந்தச் சக்தியையும் வலுவையும் இணைத்தக் கொண்டு மனிதர்கள் மனிதர்களால் சுரண்டப்படும் சமூகத்தை நாம் மாற்றி அமைப்போம். அது உறுதி. அதற்காக நாம் அனைவரும் அணிதிரள்வோம்.

***மக்களுக்கு விடுதலை!***
***ஏகாதிபத்தியத்திற்கு அழிவு!***
***சோஷலிசத்திற்கு வெற்றி!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூக்கள் மலரும் நாளைய தினத்திற்காக

பாரத லக்ஷமனின் கொலை, துப்பாக்கி சூட்டக்கு இழக்கான துமிந்த சில்வாவை வெளிநாட்டுக்கு அனுப்புதல், போதைபொருள்கள் தட்டுப்பாடு, பாதாள உலகத் தலைவர்களின் திடீர் தலைமறைவு, அடையாளம் காணப்படாத சடலங்கள், வடபகுதியில் இராணுவ அடாவடித்தனங்கள், கூலிக்கு கொளை செய்தல், பாராளுமன்றத்தில் அடிபிடிகள், இவைகள் மட்டுமன்றி ஏழு லட்சம் சுற்றுலாப் பயணிகள் எமது நாடடுக்கு வருகை தந்துள்ளார்கள், தென் பகுதிக்கான அதிவேக பாதையின் ஒரு கட்டம் திறக்கப்பட்டது போன்ற பல செய்திகள், சம்பவங்கள் வெளிவரும் தருணத்தில் 2012ம் ஆணடுக்கான "ஐஸ்வர்யமான வரவு-செலவு" திட்டத்தை ஜனாதிபதி சமர்பித்துள்ளார். தற்போது வேலையற்ற இளைஞர்களின் தொகை 15 லட்சம் வரை உயர்ந்துள்ள நிலையில் தொழில் வாய்ப்புகள் வழங்குவதற்காக எந்தவித புதிய யோசனைகளும் இல்லாத வரவு-செலவு திட்டத்தை சமர்பிப்பதே ஒரு வகையான ஐஸ்வர்யம் தான்.

கடந்த வருடத்தில் அரசு கூறியது, வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்த வருட வரவு - செலவு திட்டத்தில் தொழில் வாய்ப்புகள் பெற்றுகொடுப்பதாக அதற்காக மக்கள் சபை செயலாளர் பதவி 14000 மும், அபிவிருத்தி உதவி பணிப்பாளர் பதவி 30000 மும் வழங்கப்படும் என்றாகும். ஆனால் இவை ஒன்றும் செயல்படுத்தவில்லை.

நாட்டில் வரவு-செலவு செய்திகள் அடிபடிபடும் சூழலில் பிரமாண்டமான பிரச்சார செலவுகளை செய்து அரைகுறையாக நிர்மாணித்த தென்பகுதி அதிவேகப் பாதையை திறப்பு விழா வைபவமும் நடந்தது. இங்கு ஒரு கிலோமிற்றர் தூரத்திற்கான செலவு 55 கோடிகள். வரவு-செலவு பற்றாக்குறை தேசிய வருமானத்திற்கு சமனாகியுள்ள எம்மை போன்ற நாட்டில் இவ்வாறான செலவுகள் செய்வது பொருந்துமா என்பது ஆராய்ந்து பார்க்க வேண்டிய வேறு விடயமாகும்.

எவ்வாறாயினும், வரவு-செலவு திட்டத்தின் இனிமை வார்த்தைகளிலும், திறந்துவைக்கும் அரைகுறை அதிவேக பாதைகளிலும் சமுதாயத்தை மயக்குவதற்கு ராஜபக்ஷ ஆட்சி முயற்சியெடுத்து வருகிறது. சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்பான எண்ணிக்கைகள், அரசு கூறும் விதத்தில் பொருளாதார வளர்ச்சியின் எண்ணிக்கைகளையும் போனறு பல்வேறு சவடால்களை இதற்காக அரசு பயன்படுத்தி வருகிறது. உலக மட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தாலும், எமது நாடு இவ்வாறான சூழ்நிலையிலும் தலை நிமிர்ந்துள்ளதென சுட்டிக்காட்டுவதற்கும் போலி பிரயத்தனங்களில் ஈடுபடுகிறது. இதில் உண்மை, பொய் என்னவென்பது குறித்து நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இது மேலோட்டமாக தெரிவதைப் போன்று சரளமானதல்ல ஜே.ஆர்.ஜயவர்தானாவினால் 1977ம் ஆண்டு தொடக்கம் திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் இந்நாட்டுக்கு சுமத்தப்பட்ட பொருளாதார மாதிரித் திட்டம் அக்காலகட்டத்தில் உலகலாவிய மட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் திட்டத்தின் இலங்கையில் பிரதிபலிப்பான விதமே இதுவாகும். இவற்றுக்கான சூழ்நிலையும் நன்றாக அமைந்திருந்தது. 5/6 பாராளுமன்ற அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை, எதிர்கட்சிகளை பலமிலக்கச் செய்தமை போன்ற பல்வேறு திட்டங்களுடாக இப்பொருளாதார திட்டம் அமுலுக்கு வந்தது. மகாவலிதிட்டத்தின் ஊடாக அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டது. சுதந்திர வர்த்தக வலயங்களை நிர்மாணித்து



அரச வளங்களை தாரைவார்ப்பதற்கான பயணம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இவற்றுக்கு மத்தியில் நாட்டில் மேலெழும்பிய தேசப்பற்று கிளர்ச்சிகள் காரணமாக ஜே.ஆர். ஜயவர்தானாவுக்கு தொடர்ந்தும் நிலைத்து பிடிக்க முடியாமல் மேடையை விட்டு இறங்கிச் செல்ல நேரிட்டது.

அதன் பின்பு பதவியேற்ற பிரேமதாசா, டி.பி. விஜேதுங்க மற்றும் சந்திரிகாவின் ஆட்சிகாலத்தில் மீண்டும் அவ்வாறான திட்டங்கள் மேற்கொள்ள முயற்சியெடுத்தாலும் அவ்வளவு தூரத்திற்கு செல்ல முடியவில்லை. 2002 பதவியேற்ற ஐ.தே.கட்சி இப்பொருளாதாரத் திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக துரித திட்டத்தை தீட்டினாலும் இரண்டு வருடங்களான குருகிய காலத்திற்குல் அவ்ஆட்சி சரிந்ததால் இத்திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. சந்திரிகாவின் ஆட்சி முடிவடைந்து ராஜபக்ஷவின் ஆட்சி மலர்ந்தாளும் நடந்த யுத்த சூழ்நிலையில் அனைத்தும் யுத்தத்தால் மூடப்பட்டிருந்தது.

ஆனால் யுத்தம் முடிந்ததன் பின்பு தேர்தல்கள் ஊடாக ராஜபக்ஷ ஆட்சி பாராளமன்றத்தில் 2/3 பெரும்பாலான அதிகாரத்தையும், நிறைவேற்று அதிகாரத்தை இன்னும் பலப்படுத்தி மேலே குறிப்பிட்ட பொருளாதாரத் திட்டத்திற்கான புதிய நிலமைகள் உருவாக்கப்பட்டது.

அதே போல் அனைத்து ஏகாதிபத்திய சக்திகளும் தமது திட்டங்களை எமது நாட்டிக்குள் நுழைத்த வண்ணம் உள்ளன. அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்துகொடுப்பதற்கும், ஏகாதிபத்தியத்தின் கொள்ளைகாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதற்காகவும் இந்நிலைமைகளுக்கு மத்தியில் ராஜபக்ஷ ஆட்சி தயாராகவுள்ளது. இதற்காக அதிவேகப் பாதையகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் தேவைப்படுகின்றது.

பிரதான மூலதன வங்கிக் கணக்கை திறந்து விட வேண்டும். மூலதனத்திற்கு தேவையான சட்டங்களை இன்னும் இலகுவாக்க வேண்டும், நகரப்புறங்களில் மற்றும் கிராமப்புறங்களில் காணிகளை, விவசாய நிலங்களை, வனாந்தரங்களை, கனிய வளங்கள் உட்பட அனைத்து வளங்களையும் கொள்ளையடித்து கொள்ள வேண்டும். இதுமட்டுமன்றி மனித வளத்தையும் கொள்ளையடித்துக் கொள்ள வேண்டும்.

எனவே ராஜபக்ஷ ஆட்சி வரவு-செலவு திட்டத்தை வெளியிடுவது இவற்றை பூர்த்தி செய்துகொள்ளும் நோக்கத்திலேயே ஆகும்.

எனவே, இந்த வங்குரோத்தான முதலாளித்துவ ஆட்சியினால் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவது ஒரு வகையிலும் சாத்தியப்படாத விடயமாகும். எனவே "செழிப்பான நாளைய தினத்திற்காக" கண்டன யாத்திரைகள் செல்வது எதற்காக என்ற கேள்வி யாருக்காவது எழலாம். தொழில் என்பது வாழ்வதற்கு அடிப்படைத் தேவயான படியால் நடைமுறையிலுள்ள சமுதாயத்தில் தொழில் வாய்ப்பு கோருவது வாழ்வதற்கான உரிமையை கோருவதென்பது தடுக்க முடியாத விடயமாகும். எனவே அனைத்து மக்களுக்கும் உயிர்வாழ்வதற்கான புனிதமான உரிமை உள்ளது. நாம் கோருவது அனைத்து இளைஞர்களுக்கும் உரிய தொழில் வாய்ப்பை வழங்கு என்றாகும். இது இளைஞரின் வாழ்க்கையை உறுதிபடுத்தலாகும். இவ்வாறான திட்டங்களை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள முதலாளித்துவ ஆட்சிக்கு முடியாவிட்டால், வாழ்க்கையை உறுதிபடுத்தக் கூடிய, தனது திறமைகளுக்கு, இளம் சக்திகளுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கும், மனிதாபிமானமுல்ல ஆட்சியை வென்றெடுப்பதற்காக எமது நாட்டு இளைஞர்களை அணிதிரட்ட வேண்டும். உண்மையில் இளைஞர்களின் மனங்களில் பூக்கள் மலர்வது இவ்வாறான நாளைய தினத்தை வென்றெடுப்பதினால் ஆகும்.

## இளைஞர்களின் குரல்



### உயிர்த்தெழு

மௌனத்தை உடை. உயிர்த்தெழு
மர உதடு திற
பேசு !

புமியின் புன்னகையை
மீட்டுந் தரும்
வேட்கையோடு
முன்முளைத்த மரபுகளை
முறித்தெறியும் வேகத்தோடு
பேசு !

கலைகளின்
ஒப்பனைகளைக் கழற்றி
நிகழ்வின் காயங்களை
வலியின் கனத்தோடு
விவரி !

பூ வெறிந்து
பாவெறிந்து
கண்ணீர் எறிந்து
கற்களைக் கரைக்கும்
முயற்சியைத் துற.

அர்த்தங்களின்
அடர்த்தி குறையாத
ஆவேசத்தோடு
வீசு சொற்களை !
வேர்வரை விழட்டும்
மடமைகள்

இயல்களைத்
தெரிந்து கொள்.
இசங்களைப்
புரிந்து கொள்
பேசு !

சீழ்பிடித்த
சிகரங்களின் உள்ளழுக்கை
உண்மை விரல்களால்
தொடு
முகவரிகளின்
அக வரிகளை ஆய்வு செய்

உன்னை
இயல்பாய் வெளிப்படுத்து
பேசு !

ஞானவெறி கொள் !
ஞாலவெளி பற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்தியத்தின் தேவைக்கு ஆடும் எமது நாட்டின் நிலைமை மிகவும் துயரமானது

உலக ஜனநாயகத்துக்கான இளைஞர் மாநாடு போர்த்துக்கேய நாட்டில் சடைபெற்றது. அதில் கலந்துக்கொண்டு இலங்கை திரும்பிய சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல்ரத்நாயக்க அவர்களுடனான நேர்கானல்..

செஞ்சக்தி:- உலக ஜனநாயக இளைஞர் அமைப்பில் சோஷலிச இளைஞர் சங்கத்தின் சார்பில் நீங்கள் கலந்து கொண்டீர்கள் இதைப்பற்றியும் இம் மாநாட்டின் பலன்கள் பற்றியும் விளக்கினால்?

தோழர் பிமல் :- இம்முறை போர்த்துக்கேய நாட்டின் லிஸ்பன் நகரத்தில் இடம்பெற்ற உலக ஜனநாயக இளைஞர் மாநாட்டில் சோஷலிச இளைஞர் சங்கம் மற்றும் சோஷலிச மாணவர் சங்கம் கலந்து கொண்டது. இம் மாநாட்டில் 53 நாடுகளை பிரதிநிதித்துவம் செய்து 87 அமைப்புகளில் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உலக ஜனநாயக இளைஞர் மாநாடு உலகலாவிய மட்டத்தில் இளைஞர்களை பிரதிநிதித்து செய்யும் அதே போன்று சோஷலிசவாதிகள், கம்யூனிசவாதிகள், முற்போக்காளர்கள் பிரதிநித்துவம் செய்யும் மிகப்பெரிய மாநாடாகும். 1945ல் இரண்டாம் உலகப்போரின் பின்பு கம்யூனிஸ மற்றும் சோஷலிச இளைஞர் சங்கங்களின், முற்போக்காளர்களின் பங்கில் அன்றைய சோவியத் யூனியன் ஆதரவில் இடம்பெற்ற ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இளைஞர் மற்றும் மாணவர் இயக்கம் ஆகும். 2000ம் ஆண்டிலிருந்து அதன் பிற் காலத்தில் சோஷலிச இளைஞர் சங்கம் இதில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றது. 1970 கட்டத்திலிருந்து இதில் அங்கத்துவம் பெற்று கொள்வதற்கு நாம் முயற்சியெடுத்தாலும் பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக அச் சந்தர்ப்பம் எமக்கு கிடைக்கவில்லை. இத்தருணத்தில் இம்மாநாட்டின் அதியுயர் பீடத்தில் தீர்மாணங்களை எடுப்பதற்காக ஒரு கண்டத்தில் 7 அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் சோஷலிச மாணவர் சங்கம் 2003 லிருந்து ஆசிய பசுபிக் வலையத்தை பிரதித்தும் செய்து கலந்து கொண்டது. இம்முறை மாநாட்டை போர்த்துக்கேய இளைஞர் சங்கமே ஏற்பாடு செய்தது. இம்முறை மாநாட்டின் விசேடத் தன்மை என்னவென்றால் சோஷலிச முகாம் சரிவடைந்து 20வருடங்கள் கடக்கும் இத் தருணத்தில் அதன் பின் நடந்த மிகவும் வெற்றிகரமான மாநாடு இது வென்றே கூறலாம். ஏனென்றால் பெரும்பாளானோர் கலந்துகொண்டனர். கலந்து கொண்டோரில் அரசியல் ஆர்வமும், உத்வேகமும் சிறந்த முறையில் காணப்பட்டது. இம்முறை தலைமை குழுவின் தலைவராக சைப்பிரஸ் தொழிலாளர் கட்சியில் (AKEL) இளைஞர் சங்கத்தின் ஓர் தோழர் தலைவராகவும் கியூபா கம்யூனிஸ் இளைஞர் சங்கத்தின் ஓர் தோழர் பிரதான செயலாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் உலகாவிய மட்டத்தில் எகாதிபத்தியத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் எதிராக போராடும் பல்வேறு இளைஞர் குழுக்கல் கலந்து கொண்டிருந்தனர். மத்திய கிழக்கில் எகிப்து, லெபனான் உட்பட இஸ்ரவேல் பாலஸ்தீன் நாடுகளை பிரதிநிதித்துவம் செய்து கலந்து கொண்டவர்கள் மீது அனைவரது அவதானிப்பும் கவர்ந்தது. பிரதானமாக வந்த முடிவு முதலாளித்துக்கும் ஏகாதிபதியத்துக்கும் இளைஞர்களின் வாழ்கைளை சீரழிப்பது, யுத்தங்களை நிர்மானிப்பது, தொழில்களிலிருந்து வெளியேற்றுவது தவிர இளைஞர்களுக்கு சுபீட்சமான எதிர்காலத்தை வழங்க முடியாது. எதிர்காலத்தை வளமாக்க வேண்டுமானால், இளைஞர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதற்கு, உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு சமத்துவத்தை பெற்று கொள்வதற்கு முதலாளித்துவத்துக்கு ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக போராடுவதே ஒரே வழியென்ற முடிவுக்கு வந்தோம்.

இதேபோன்று தற்போது உலகாவிய மட்டத்தில் இடம்பெறும் தொழிலாள வர்கத்தின் போராட்டங்களுக்கு இளைஞர்களின் கிளர்ச்சிகளுக்கு சமூக மாற்றத்திற்க்காக சமூக புரட்சிக்காக திருப்பிக்கொள்ள வேண்டும். அதேபோன்று அனைத்த இளைஞர்களையும் அரசியல் ரீதியாக தமது ஒருங்கிணைத்து அணிதிரட்ட வேண்டும். என்பதே பிராதான நோக்கம் உலக ஜனநாயக இளைஞர் அமைப்பு என்பது உலகலாவிய மட்டத்தில் நியாயமான மக்கள் போராட்டங்களுக்கு செயல் ரீதியாக சர்வதேச உதவிகளை வழங்கும், சகோதரத்துவத்தின் ஊற்றாக விளங்கும் அமைப்பாகும். இது பாலஸ்தீன் விடுதலை போராட்டமாகவோ, இலங்கை மக்களின் உரிமை போராட்டமாகவோ, தென் ஆபிரிக்கா அல்லது வேறு எந்த பகுதியிலும் இடம்பெரும் நியாயமான போராட்டமாக இருக்கலாம் இவை அனைத்துக்கும் ஆதரவு வழங்கும் ஓர் அமைப்பாகும். எனவே இம் முறை மாநாட்டில் குறிப்பாக இலங்கையில் மாணவர் சங்கங்களின் உரிமை பாதுகாக்கவும் ஜனநாயகத்தை மறுப்பதற்கு எதிராகவும், பாலஸ்தீனத்தில் அடக்குமுறைக்கு எதிராகவும், மத்திய கிழக்கு வலயத்தில் அடக்கு முறைக்கு எதிராகவும். பொதுவாக எடுத்துக் கொண்டால் இம்முறை மாநாடு அரசியல் ரீதியாக சிறந்த தீர்மானங்களை எடுத்த, அதேபோன்று வறுகை தந்தோர் மறறு அவர்களின் உத்வேகம் போன்றவையும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

செஞ்சக்தி:- மாநாட்டின்போது எமது நாட்டு இளைஞர் தொடர்பாக எவ்வாறான தீர்மாணங்கள் எடுக்கப்பட்டது?

தோழர் பிமல்:- நாம் மிகவும் தெளிவாகக் கூறிகின்றோம் எமது நாட்டின் ராஜபக்ஷ ஆட்சியின் சர்வாதிகார ஜனநாயக விரோத நடவடிக்கைகள் குறித்து பரந்தளவிலான உலகலாவிய மட்டத்தில் அவதானிப்பை கொண்டு வருவதற்காக இம் மாநாட்டின் இறுதியில் வெளியிடும் அரசியல் அறிக்கையில் இவ் விடயங்களை உள்ளடக்கினோம் இது மட்டுமன்றி எமது நாட்டு மாணவர் இயக்கங்கள் அடக்குமுறைக்கு உட்படுத்துவதும் யுத்தம் முடிந்து இரண்டரை வருடங்கள் கடந்த நிலையில் வடக்கு, கிழக்கு மக்களின் குறிப்பாக இளைஞர்களின் உரிமைகள் தொடர்பாக நான்கு யோசனைகளை உள்ளடக்குவதற்கு எம்மால் முடிந்தது அவை தடுத்துவைத்துள்ளோரின் பெயர்களை பகிரங்கப்படுத்த வேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் குடியேற்றம் உட்பட புனர்நிர்மாணங்கள், புதிய அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த வேண்டும், யுத்தக்குற்றங்கள் விளைவித்தோருக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றயோசனைகளாகும், இவை அனைத்தும் இம் மாநாட்டில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதேபோன்று ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஊடாக அடக்கமுறை அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களை அடக்குமுறை செய்வது தொடர்ப்பாகவும் இதில் கலந்துரையாடினோம் இது இவ்வாறிருக்க மாநாட்டின் அவதானிப்புக்காக இன்னும் இரண்டு பிரேரணைகள் நாம் மாநாட்டில் சமர்பித்தோம் இதில் முதலாவது குறைந்த வயதிலேயோ பணிப் பெண்ணாக சவுதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டு தற்போது அந்நாட்டில் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ரிசானா அவர்களை விடுதலை செய்வற்காக இம் மாநாடு பங்காற்ற வேண்டும் அண்மையில் கட்டுநாயக்காவில் ஊழியர் சேமலாப நிதியத்தை பாதுகாத்து கொள்வதற்கான போராடத்தின் போது கௌளைசெய்யபட்ட ரொஷேன் தொடர்பான பிரேரனையும் ஆகும்.



*சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க*

குறிப்பாக ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் இனவாதிகளின் தேவைளுக்கு அடிபணியாத முற்போக்காளர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டில் இவ் விடயங்களை கலந்தாலோசிப்பதற்கு சந்தர்பம் கிடைத்ததும் பெரும் வெற்றியாகவே நாம் கருதுகிறோம். அதேபோன்று இம் மாநாட்டில் கலந்துகொண்ட பல நாடுகள் எமது நாட்டை போன்று ஜரோப்பியரின் ஆக்கிரமிப்புக்கு முகம்கொடுத்த நாடுகளாகும். எனவே ஐரோப்பியரின் பிரித்தாளும் கொள்கைக்க இரையாகிய பல நாடுகளில் அங்கத்தவர்கள் பலர் இங்கு வருகை தந்திருந்தனர். இதேபோன்று எமது நாட்டிலும் மலையகத்தில் வாழும் மக்கள் மிகவும் துயரங்களுக்கு மத்தியில் எந்தவித உரிய வசதிகளும இன்றி வாழ்கிறார்கள். எனவே மலையக மக்கள் தொடர்பாகவும் அந்தந்த நாடுகளின் அனுபவங்களுடன் நாம் இம் மாநாட்டில் கலந்துரையாடினோம்.

செஞ்சக்தி:- சர்வதேச பாலஸ்தீன் நட்புறவு தினம் குறித்து பல நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டுள்ளீர்கள் இதன் நோக்கம் என்ன?

தோழர் பிமல்:- இன்று பாலஸ்தின் மக்கள் ஏகாதிபத்தியத்தின் தாக்கத்திற்கு உட்பட்டு சுமார் 60 வருடங்களுக்கு அதிகமாக பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். 1948ல் பாலஸ்தினுக்குள் இஸ்ரவேலை நிலைநாட்டியது. 1967ம் ஆண்டு காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் தேவைக்காக பாலஸ்தீன் மற்றம் அதை அண்டிய பகுதிகளை இஸ்ரவேல் ஆக்கிரமித்தது. இன்று பாலஸ்தீனுக்கு உரிமையாக

***குறிப்பாக ஏகாதிபத்தியத்தின் முதலாளித்துவத்தின் இனவாதிகளின் தேவைளுக்கு அடிபணியாத முற்போக்காளர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டில் இவ் விடயங்களை கலந்தாலோசிப்பதற்க சந்தர்பம் கிடைத்ததும் பெரும் வெற்றியாகவே நாம் கருது கிறோம். அதேபோன்று இம் மாநாட்டில் கல்ந்துகொண்ட பல நாடுகள் எமது நாட்டை போன்று ஐரோப்பியரின் ஆக்கிரமிப்புக்கு முகம் கொடுத்த நாடுகளாகும். எனவே ஐரோப்பியரின் பிரித்தாளும் கொள்கைக்க இரையாகிய பல நாடுகளில் அங்கத்தவர்கள் பலர் இங்கு வருகை தந்திருந்தனர்.***

10ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம்பக்கத் தொடர் மரணப்படுக்..

மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. சுதந்திரம் என்ற தலையங்கத்தில் உருவாக்கப்பட்ட அடிமைகளாக அவர்கள் மாற்றப்பட்டனர். அதன் எதிரொலியாகவே வால்ட் ஸ்ரீட் போராட்டம் உதயமானது. உழைக்கும் வர்க்கம் ஒன்று திரண்ட போராட்டக்களம் வெதுப்பேறியது. உலக மக்கள் வோல்ட் ஸ்ரீட் போராட்டத்துடன் இணைந்துக்கொண்டனாவால் ஸ்டிரீட் முற்றுகை: முன்னேற்றத்தின் முதல் தேவை புரட்சிகரக் கட்சி!

கடும் குளிரையும் பனிப்பொழிவையும் மீறித் தொடர்ந்து கொண்டிருக்கிறது வால் ஸ்டிரீட் போராட்டம். வால் ஸ்டிரீட் போராட்டத்துக்கு ஆதரவாக உலகெங்கும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். இலட்சக்கணக்கான மக்கள் திரளின் கோபத்தில் ரோம் தீப்பிடித்தது. சம்பளவெட்டு, ஆட்குறைப்பு, ஓய்வூதிய வெட்டு, மக்கள் நலத்திட்டங்கள் ரத்து, பொதுத்துறை விற்பனை ஆகியவற்றுக்கு எதிராக இலட்சக் கணக்கான மக்கள் நடத்திய போராட்டத்தில் கிரீஸ் பற்றி எரிந்தது. எகிப்தின் மக்கள் முபாரக்கின் இராணுவ டாங்குகள், போர் விமானங்களுக்கு அஞ்சவில்லை. முபாரக்கின் கூலிப்படைகள் முதல் குதிரைப்படைகள் வரை அனைத்தையும் எதிர்த்து நின்றார்கள். அன்றைய சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தின் தலைநகரம், இளைஞர்களின் கலகத்தால் நாட்கணக்கில் தீப்பிடித்து எரிந்தது. கண்டங்கள், நாடுகள், நகரங்கள் என்ற வேறுபாடு இல்லாமல், குறுக்கு நெடுக்காக உலகம் முழுவதும் மக்களின் கோபத் தீக்கு எண்ணெய் வார்த்திருக்கிறது முதலாளித்துவம். முபாரக்கின் சர்வாதிகாரம், கிரீஸ் அரசின் சிக்கன நடவடிக்கைகள், ஒபாமாவின் வரிகள், வேலையின்மை, கல்வி மருத்துவ மானிய வெட்டு, சுற்றுச்சூழல் அழிவு என்று ஆயிரம் பிரச்சினைகள் பட்டியலிடப்பட்டாலும், அவை அனைத்தின் மூல காரணம் உலக முதலாளித்துவம்தான்.

போராடும் மக்களுக்கு இது தெரியாமல் இல்லை. “முதலாளித்துவம் ஒழிக!, வங்கி முதலாளிகளைக் கைது செய்! என்று அமெரிக்காவின் ஆர்ப்பாட்டக்காரர்கள் முழங்குகிறார்கள். உணவு, உடை, இருப்பிடம், வேலை, பொழுதுபோக்கு, நுகர்பொருட்கள், கல்வி, சுகாதாரம், போலீசு, இராணுவம் அனைத்தும் கார்ப்பரேட் முதலாளித்துவத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை அவர்கள் புரிந்திருக்கிறார்கள். தனி மனித முயற்சியின் மூலம் யாரும் வெற்றி பெற முடியும்மென்ற “அமெரிக்க கனவும்” அமெரிக்க ஜனநாயகமும் பொய் என்பதை அவர்கள் தம் சொந்த அனுபவத்தில் பட்டு உணர்ந்திருக்கிறார்கள்.

எனினும், முதலாளித்துவத்திற்கு மாற்று சோசலிசமே என்று ஒப்புக் கொள்வதில் அவர்களுக்குத் தயக்கமிருக்கிறது. தன்னுடைய அரசமைப்பின் மீது மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதில் முதலாளித்துவம் வெற்றி பெற முடியவில்லை. எனினும், பல பத்தாண்டுகளாக விடாப்பிடியாக நடத்திய அவதூறுப் பிரச்சாரத்தின் விளைவாக, மக்கள் மனதில் கம்யூனிசத்தின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி, அந்த அவநம்பிக்கையின் நிழலில் அது உயிர் வாழ்கிறது. கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம், தனிநபர் ஊக்கம் மற்றும் உரிமை மறுப்பு, அதிகாரவர்க்க ஆட்சி என்ற பொய்களை மக்கள் மனதில் நிலைநாட்டி பீதியூட்டியிருக்கிறது. ரசிய, சீன சோசலிசங்களின் சீரழிவு இந்தப் பொய்களுக்கு புனுகு தடவிவிட்டது. அவற்றின் தோல்வியோ ஊனமுற்ற முதலாளித்துவத்துக்கு ஊன்றுகோலாகப் பயன்படுகிறது.

முதலாளித்துவத்தின் பேராசை, கொள்ளை, பித்தலாட்டம், போர்வெறி ஆகியவற்றை அமெரிக்காவின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். எனினும், திட்டவட்டமான மாற்று ஒன்றை முன்வைத்துப் போராடாதவரை, இவையெல்லாம் ஆற்றாமை தோற்றுவிக்கும் புலம்பல்களாகவே முடிகின்றன. சியாட்டிலில் தொடங்கி கடந்த பத்து ஆண்டுகளாக அடுத்தடுத்து பல முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்குலகில் நடந்த போதும், அவை முன்னேற முடியாமல் தேங்குவதற்கு இதுதான் காரணம். இந்தத் தேக்கம் தொடருமாயின், அது சோர்வையும் அவநம்பிக்கையையுமே மக்களிடம் பரப்பும். அவ்வகையில் அராஜகவாதிகள், பின் நவீனத்துவவாதிகள், டிராட்ஸ்கியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்ட பலரும் முதலாளித்துவத்தின் கையாட்களாக இருந்து மக்களைச் சிதறடிப்பார்கள். விரக்திக்குத் தள்ளுகிறார்கள். முதலாளித்துவத்திடம் சரணடையச் செய்கிறார்கள்.

வால் ஸ்டிரீட் போராட்டம் உள்ளிட்ட போராட்டங்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு வரும் பல்லாயிரக்கணக்கான மக்களை ஈர்ப்பதற்குக் காரணம் முதலாளித்துவத்தின் மீதான மக்களின் வெறுப்பு. அதனை சோசலிசத்தின் மீதான விருப்பமாக மாற்றுவதன் மூலம்தான் முதலாளித்துவத்தை வீழ்த்த முடியும். ஏகாதிபத்தியமாகவும், மேல்நிலை வல்லரசுகளாகவும், ஒற்றைத்துருவ மேலாதிக்கமாகவும், உலக வர்த்தகக் கழகமாகவும் அரசியல் பொருளாதார இராணுவ ரீதியில் மென்மேலும் மையப்படுத்தப்பட்ட ஒரு கொடிய வன்முறை எந்திரமாக மாறிவரும் உலக முதலாளித்துவத்தை உதிரியான கட்சிகளும், கலவையான முழக்கங்களும், தொளதொளப்பான அமைப்பும் வீழ்த்த முடியாது.

முதலாளித்துவத்துக்கு எதிரான மார்க்சிய லெனினிய சித்தாந்தம், ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் அமைந்த கட்சி, அதன் தலைமையில் அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட மக்கள்திரள் இவையில்லாமல் எந்தவொரு நாட்டிலும் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத்தை வீழ்த்த இயலாது. மக்களின் கோபம் ஒரு சுனாமியைப் போன்ற ஆற்றலுடன் மேலெழுந்தாலும், ஆளும் வர்க்கம் அந்த சுனாமிக்கும் ஒரு வடிகாலைத் தயாரித்துவிடும். வீரம் செறிந்த எகிப்து மக்களின் போராட்டம் எப்படி மடைமாற்றப்பட்டதென்பது நம் கண்முன் தெரியும் சமகாலச் சான்று. முதலாளித்துவத்துக்கு எதிரான கம்யூனிசத்தின் சித்தாந்தப் போர், போல்ஷ்விக் உறுதியும் கட்டுப்பாடும் கொண்ட கட்சி இவ்விரண்டு அவசரத் தேவைகளையும் நிறைவு செய்யக் கோருகின்றன உலகெங்கும் எழுந்து வரும் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள்..

---

09ம் பக்க தொடர் ஏகாதிபத்திய..

இருந்த நிலத்தில்18% மட்டுமே அவர்களுக்கு மிஞ்சியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் தூரத்திற்கு மதிலை கட்டி இஸ்ரவேல் பாலஸ்தீனை பிரித்துள்ளது அதேபோல் பாலஸ்தீனத்துக்கு பலவந்தமாக இஸ்ரவேல் குடியேற்றங்கள் நடந்த வண்ணம் உள்ளது. பாலஸ்தீனத்துக்கு உரித்தாக விருந்த தண்ணீர் வளத்தில் 80%த்தை இன்று இஸ்ரவேல் ஆக்கிரமித்துள்ளது. காசா பகுதியில் அடிப்படை வசதிகள் கூட மறுக்கபட்ட மக்களை ஒன்று குவித்த உலகிலேயே மிகப் பெரிய திறந்த சிறைச்சாலையை நிர்மாணித்துள்ளனர். இம்மக்களின் தேவையான உணவு மற்றும் மருந்து பொருட்கள் விநியோகிக்கச் செல்லும் உதவிக் குழுக்குளின் வாகனங்களை துரத்திச் சென்று தாக்கும் நிலைக்கு இன்று ஏகாதிபத்தியம் தள்ளப்பட்டுள்ளது மத்திய கிழக்கில் காணப்படும் பெற்றோலிய வளத்தை சூறையாடுவதற்கே அமேரிக்கா உட்பட அணைத்து ஏகாதிபத்தியமும் இஸ்ரேவலை கைப்பொம்மையாக பயன்படுத்தி மிலேச்சத்தனமாக செயல்படுகின்றது. எனவே ஏகாதிபத்தியத்தின் இந்த தான்தோன்றித் தனத்துக்கு எதிராக பாலஸ்தீனத்தின் விடுதலைக்காக இஸ்ரவேல் நாட்டிற்குள் முற்போக்காளர்கள் குரலெழுப்புகின்றனர் பாலஸ்தீனின் விடுதலைக்காக பாலஸ்தீன் உழைக்கும் மக்கள், இளைஞர்கள், முற்போக்காளர்கள் மற்றும் உலகலாவிய மட்டத்தில் நடத்தும் பரந்தளவிலான போராட்டம் நடத்த வேண்டும். இது தனித்து இஸ்ரவேலுக்கு எதிரான போராட்டத்தைவிட அமெரிக்கா உட்பட்ட ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமாக அமைய வேண்டும். எனவே எந்த கனரக ஆயுதங்களையும் விட சர்வதேச நட்புறவு மிகப்பலமானதாகும் என நாம் நம்புகின்றோம் இந் நோக்கத்தில் தான் நவம்பர் 29 லிருந்து டிசம்பர் 10ம் திகதி வரையும் ஆர்பாட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், கண்டன பதாகைகளில் கையொப்பமிடுதல், சினிமா காட்சிகள் ஒழுங்குசெய்தல், அன்று பலஸ்தீன், இன்று லிபியா, நாளை? என்ற தலைப்பில் கொழும்பில் நடத்தும் கருத்தருங்கு போன்றவற்றை ஏற்பாடு செய்துள்ளோம். இவ்வாறு உலகலாவிய மட்டத்தில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைத்தால் வெற்றி கொள்ள முடியாத ஒன்றுமில்லை என்ற செய்தியை நாம் அனைவருக்கும் கொடுக்கின்றோம்.

செஞ்சக்தி:- இம் முறை வரவு செலவு திட்டத்தினுடாக ராஜபக்ஷ ஆட்சி எமது நாட்டு இளைஞர்களுக்கு பெற்று கொடுத்துள்ள சலுகைகள் என்ன?

தோழர் பிமல்:- மஹிந்த ராஜபக்ஷ தனது 7வது வரவு செலவு திட்டத்தை சமர்பிக்கும் தருணத்தில் இந் நாட்டு இளைஞர்களை மறந்த ஓர் வரவு செலவு திட்டமாகவே இதை சுட்டிக்காட்டலாம் நாம் ஒருபோதும் நம்பமாட்டோம் முதலாளித்துவ ஆட்சிக்கு நாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை குறிப்பாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்று ..இதில் முக்கியமானதொறு பிரச்சினையான தொழில் வாய்ப்பு பிரச்சினையை எடுத்துக்கொண்டால் எமது நாட்டில் மட்டுமன்றி வளர்சியடைந்த நாடுகள் எனக்குறிப்பிடும் ஜரோப்பிய நாடுகளில் கூட தொழில் வாய்ப்பில்லாத தொகை பல மடங்குகளால் அதிகரித்துள்ளது ஏகாதிபத்தியத்தின் தாளத்திற்கு நாட்டியமாடும் எமது நாடுகளின் நிலமை மிகவும் துயரமானதாகும் எமது நாட்டில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களின் தொகையை எடுத்தால் 15 லட்சத்தையும் தாண்டுகின்றது இது 6 இளைஞர்களில் ஒருவருக்கு தொழில் வாய்ப்பில்லாத நிலமையாகும் கடந்த கால வரவு-செலவு திட்டங்களை எடுத்துக் கொண்டால் பல்வேறு கண்கட்டு வித்தைகள் காணப்பட்டது. அவை தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல், இளைஞர்களுக்கு தொழில் கிடைக்கும்வரை கொடுப்பனவு வழங்குதல், கொரிய நாட்டில் தொழில் வாய்ப்பு வழங்குதல் தேசிய தொழில் கொள்கையை நிர்மாணித்தல் போன்ற கனவுக்குல் சிக்கவைத்தன். இம்முறை வரவு-செலவு திட்டத்தை எடுத்துகொண்டாலும் ஒரு சில வாக்கியங்களுக்கு இளைஞர்களின் பிரச்சினைகளை வரையறுக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் வாய்ப்புகள் வழங்குவது குறித்து ஒரு வார்த்யேனும் இதில் குறிப்பிடப்பட வில்லை நாட்டின் கிராம புறங்களின் நிலமை மிகவும் பாரதுாரமானதாகும். அதேபோன்று உயர்தரம் சித்தியடைந்தோரில் 15மூ ற்கு தொழில் வாய்ப்பில்லை என அரசாங்க அறிக்கைகளிலேயே சுட்டிக்காட்டிகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மற்றும் தோட்ட பகுதிகளை எடுத்து கொண்டால் நிலமை இன்னும் பாரதுாரமானதாகும் தொழில் வாய்ப்பில்லாத, அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட பெரும்பாலான இளைஞர்கள் இப் பகுதிகலிலேயே வாழ்கிறார்கள். இவர்களுடைய பிரச்சினைகளை தீர்பது எவ்வாறாயினும் இவற்றை கதைப்பது கூட இம்முறை வரவு-செலவு திட்டத்தில் மறுக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்புகள் வழங்குவதற்கான எந்தவொரு உரிய திட்டமும் இதில் உள்ளடக்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு, மலையக இளைஞர்கள் பல்வேறு துயரங்களுக்கு இன்னல்களுக்கு மத்தியில் இன்று கொழும்பில் தொழில் செய்கிறார்கள் அரசு வடக்கில் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற திட்டங்களை உரைத்தாலும் பொதுமக்களுக்கு இதில் ஒன்றுமே போய்ச் சேரவில்லை. எனவே இம்முறை வரவு-செலவு திட்டமும் இந்நாட்டு மக்களுக்கும், இளைஞர்களுக்கும் எந்தவித சலுகையும் வழங்க முடியாத ஒன்று என வலியுறுத்துகிறோம்.

அதேபோன்று இங்கு ஓர் அரசியல் பிரச்சினையும் காண்கிறோம். இங்கு எமக்கு அரசாங்கத்தை மட்டும் விமர்சிப்பதில் நின்றுவிட முடியாது இந்நாட்டு இளைஞர்கள் தொழில் செய்வது தனது உரிமையென நன்கு உணரப்படவில்லை. இந்நாட்டு மாணவர்கள் தொழிலாளர்கள் ஊடகவியலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராடுகின்றனர். ஆனால் தொழில் வாய்பற்ற இளைஞன் இதற்காக போராடுவதை மிகவும் அரிதாகவே காணலாம். தொழில் இல்லாவிட்டால் உயிர் வாழவே முடியாது. இதேபோன்ற பாரதுாரமான பிரச்சினைக்கு போராட இந்நாட்டு இளைஞர்களுக்கு அனுபவங்கள் போதாது எனவே சோஷலிச இளைஞர் சங்கமாகிய நாம் தொழில் வாய்ப்பென்பது எமது உரிமை. இதற்காக போராடவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும் இதற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம் இக் குறிக்கோளுக்காக இந்நாட்டு தொழில் வாய்பற்ற இளைஞர்கள், தொழில் வாயப்பற்ற 42000 ஆயிரம் பட்டதாரிகள் மற்றும் கம்பனிகளினால் வெளியேற்றப்பட்ட சுமார் 3 லட்சம் தொழிலாளர்களை ஒன்றிணைத்து தொழில் வாய்ப்பில்லாத இளைஞர் மத்திய நிலையத்தை நிலைநாட்டுவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணப்படுக்கையை நோக்கிய முதலாளித்துவமும் எழுச்சிபெறும் மக்கள் போராட்டமும்..

இன்று ஏகாதிபத்திய நாடுகள் தமது அழிவிற்கான நாட்களை கணக்கிட்டுக்கொண்டிருக்கிறது. அழிந்து போவதற்கு இன்னமும் பத்து வருடங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலை உருவாகிவிட்டது.புற்று நோய் பீடித்த நோயாளி போன்று மரணம் நிரந்தரமாகிவிட்டது. நாட்கள் கணக்கிடப்படுகின்றன.

மரணப்படுக்கையிலும் உலகின் ஒவ்வொரு மனிதனையும் மிரட்டிவருகின்ற ஏகபோகங்கள் சரிந்து விழுவதற்கு இன்னும் ஐந்து ஆண்டுகள் அதிகமானதே. முதலாளித்துவத்தின் வெற்றியென மார்தட்டிக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் யூரோ இன்று கேள்விக்குள்ளகியுள்ளது. ஜேர்மனி ஏற்கனவே தனது சொந்தப் பணத்தை அச்சடிக்க ஆரம்பித்துவிட்டது.

முன்னைய அமரிக்க ஜனதிபதி ஜோர்ஜ் புஷ் இன் சர்வதேச பொருளாதார ஆலோசகரும், டொச் வங்கியின் ஆலோசகருமான பைப்பா மல்க்ரென் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

யூரோவின் வீழ்ச்சியோடு ஐரோப்பிய ஒன்றியம் மயானத்திற்கு அனுப்பப்பட்டுவிடும். யூரோவிலிருந்து மார்க் இற்கும், பிரஞ் பிராங்கிற்குமான மாற்றத்தின் போது திருடப்படும் பணத்தின் ஒருபகுதியை இன்னும் சில நாட்கள் வாழ்வதற்காகவும், கீன்ஸ் இன் வழிமுறையைத் தற்காலிகமாகப் பிரயோகிப்பதற்காகவும் பயன்படுத்திக் கொள்வார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தோடு ஒட்டிக் கொண்ட கிழக்கைரோப்பிய நாடுகள் இருளின் விழிம்பிற்குள் இழுத்துவரப்படும். பொருளாதாரக் கணக்கீட்டைச் சரியாகப் பிரயோகித்தால் யூரோவிற்கு அடுத்ததாக அமரிக்க டொலரின் நிரந்தர அழிவு ஆரம்பிக்கும். அமரிக்க டொலரின் ஆதிக்கத்தில் கட்டியமைக்கப்பட்டிருக்கும் ஏகபோக சாம்ராஜ்யம் சரிவடையும். டோலரையும், அமரிக்காவையும் அதன் துணை ஏகாதிபத்தியங்களையும் இணைத்துக் கட்டப்பட்ட்ருக்கும் மண் சுவர் இடிந்துவிழும். வர்த்தக அமைப்புமுறை அதன் ஒழுங்கமைப்பு, சட்டம், ஒழுங்கு, மதம் அதன் புனிதம் குறித்த கற்பனை, குடும்பம் அதன் தூய்மை குறித்த புனைவுகள், சொத்து தொடர்பான விருப்பு என்ற எல்லாமே கேள்விக்கு உள்ளாகும்.

உலகின் ஒவ்வொரு மனிதனையும் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கவிருக்கும் டொலரின் சரிவு உலகைக் குலுக்கிய ரஷ்யப் புரட்ட்சியின் பத்து நாட்களைவிடப் பலமான அதிர்வுகளை ஏற்படுத்தும். ஐரோப்பாவிலும் அமரிக்காவிலும் மனிதர்கள் பெரும்பகுதி மக்கள் இழப்பதற்கு உயிரைத் தவிர வேறேதும் இல்லை என்ற நிலையை வந்தடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஏகாதிபத்தியங்கள் மரணித்துப் போகும் காலகட்டத்தைத் தெளிவாக வரையறுப்பதற்கு கீன்ஸ் இன் கோட்பாடே போதுமானது.

சரிந்து விழுந்து கொண்டிருந்த பொருளாதாரத்தைத் தற்காலிகமாகத் தூக்கி நிறுத்த கீன்ஸ் முன்வைத்த ஒடுக்குமுறைக் கோட்பாட்டை ஐரோப்பிய, அமரிக்க அரசுகள் பயன்படுத்த ஆரம்பித்திருந்தன. அதாவது வீழ்ச்சி ஏற்படும் வேளைகளில் பொருளாதாரத்தில் அரசு தலையிட்டு அதனை ஊக்குவிக்கும் வழிமுறையைக் கையாள்வதற்கான அனைத்துப் பொறிமுறைகளையும்



ஏற்படுத்திக்கொண்டன. சமூகதின் இயக்கத்தை முற்றாகப் புறக்கணித்த முட்டாள் தனமான இவரின் கோட்பாடு பெரு முதலாளிகளின் பணப்பசிக்குத் தீனி போட்டது.

தொந்தரவின்றி சுதந்திரமாக உலவ விடப்பட்ட பெரு முதலாளிகள் தமக்குச் சேவை செய்வதற்கான அரசுகளையும் அவற்றின் அதிகாரக் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளப் போகிறவர்களையும் கூடத் தீர்மானித்தனர். பொதுவாக பொருளாதர நெருக்கடிக்கையை சுதாகரித்துக் கொள்வதற்காக அரசுகள் பணத்தை முதலீடு செய்கின்ற காலப்பகுதிகளில் ஐரோப்பாவில் “இடதுசாரிகள்” என அழைக்கப்படுவோர் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டனர்.

நெருக்கடி சீர் செய்யப்படும் நிலையை அடைந்ததும் “வலது சாரிகள்” என்று அழைக்கப்பட்டோர் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர். விரல் விட்டு எண்ணத்தக்க பெரு முதலாளிகளுக்குச் சேவை செய்வதற்காகவே ஊடகங்களிலிருந்து கருத்தை உருவாக்கும் அனைத்துச் சாதனங்களும் செயற்பட்டன. உலகின் ஒவ்வொர் அங்கமும் ஒரு குறித்த பொறிமுறைக்குக் கீழ் வலிந்து இயக்கப்பட்டது.

கீன்ஸ் இன் கோட்பாடு தற்காலிகமாக அழிவிலிருந்து தக்கவைப்பதற்கான வலுவை வழங்கிய அதே வேளை 1970 ஆம் ஆண்டு மேற்கின் முதலாளித்துவ அமைப்பில் மற்றொரு நெருக்கடி உருவாகின்றது.

இன்றைய அளவில் நாம் காணுகின்ற மாக்ரோ பொருளாதாரம் (Macro economy) இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அதன் உயிரை உற்பத்தி செய்கிறது. மிகப் பெரும் நிறுவனங்கள் உருவாகின்றன. சிறிய நிறுவனங்கள், நுண்ணிய உற்பத்திகள் எல்லாம் பெரும் நிறுவனங்களால் விழுங்கப்படுகின்றன. மத்திய தர வர்க்கத்தின் உற்பத்தித் திறனுடைய ஒரு பகுதி தொழிலாளர்களாக மாற்றமடைகின்றனர். தொழிலாளர் மத்தியிலிருந்து கூலி உயர்வுப் போராட்டங்கள் ஐரோப்பாவிலும் அமரிக்காவிலும் உருவாகின்ற காலப்பகுதியாக 60 களின் பிற்பகுதி முழுவதையும் காணலாம்..

இந்தக் காலப்பகுதியில் தான் பிரான்சில் மாணவர் எழுச்சியும் மக்கள் எழுச்சியும் உருவான காலம். மேற்கின் பலபகுதிகளில் அரச எதிர்ப்புப் போராட்டங்கள் உருவாகின. தொழிலாளர்களின் எழுச்சியே இவற்றின் அடிப்படையான காரணமாக அமைந்திருந்தது. [illegible] உருவாக்கிய பெரு நிறுவனங்களின் கூலிச் சுரண்டலுக்கு எதிராகத் தொழிலாளர்களின் போராட்டங்கள் அரசுகளைத் தற்காலிகமாகவேனும் நிலைகுலையச் செய்திருந்தன. இங்கிலாந்து மிகப் பெரிய வேலை நிறுத்தத்தைச் சந்தித்தது. அமரிக்கா, தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் நிலைகுலைந்தது.

இறுதியில் பின் நவீனத்துவம் போன்ற பிற தத்துவங்கள் அரசுகளுக்கு எதிரான போராட்டங்களின் திசை வழிகளை மாற்றியமைத்தன. குறிப்பாக பிரஞ்சுக் கம்யூனிசக் கட்சியின் பிறழ்வுகளில் வெறுப்படந்த மத்திய தர வர்க்கத்தின் மேலணிகளைச் சார்ந்த அறிவுஜீவிகள் பெரும் மக்கள் திரள் எழுச்சிகளுக்கு எதிரான குறுகிய போராட்டங்களை முன்வைத்தனர். குறுங் கதையாடல் என்ற தத்துவப் பிறழ்விற்குள் இதனை உட்படுத்திக் கொண்டனர். இவற்றின் தாக்கங்கள் இலத்தீன் அமரிக்க நாடுகள் வரை பரவியது.

அரசுகளின் நிலை குலைவை மறுசீரமைக்கும் நோக்கில் கருத்தியல் தளத்தில் கல்வி சார் நிறுவனங்கள் ஊடாக இவ்வாறான தத்துவங்கள் உருவாகின. 1968 ஆம் ஆண்டு மாணவர் எழுச்சிக்குப் பின்னரும் தொடர்ந்த பிரஞ்சு மாவோயிசக் கட்சிகளைச் சீர்குலைப்பதில் சிந்தனைத் தளத்தில் முதலளித்துவம் சார்ந்து பின்னவீனத்துவம் போன்ற தத்துவங்கள் நடத்திய இப் போராட்டங்கள் பெரும் பங்காற்றியது எனலாம்.

இதற்கு அப்பால் பிரித்தானியவில் மாக்ரட் தட்சரின் அதிகாரமும் அமரிக்காவில் ரொனால்ட் ரீகனின் அதிகாரமும் இணைந்து முன்வைத்த நவ தாராள வாத (Neo-Liberalism) கொள்கை மேற்கின் 1970 இற்குப் பின்னான அமைப்பியல் நெருக்கடியைத் தற்காலிகமாகச் சீர்செய்தது.

நவதாராளவாதம் என்பது காலனியத்திற்குப் பின்னான காலப்பகுதில் மறு காலனியாக்கதிற்காக(Re-colonisation) தெளிவான வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டிருந்தது.

இன்றை முதலாளித்துவம் என்பது நவதாராளவாதமும், கீனேஸ் இன் கோட்பாடும் இணைந்த கலவைய (mixture of neo-liberal and Keynesian theory).

அமரிக்காவிலும் பிரித்தானியாவிலும் உருவான நவ தாராளவாதம் உலகம் முழுவதும் பரவ ஆரம்பிக்கிறது. 80 களின் பின்னான காலப்பகுதி முழுவதும் நவதாராளவதத்திற்கான காலகட்டம். [illegible] நவதாராளவார்தக் கோட்பாடு பிரயோகிக்கப்பட்ட போதே அது உலக மயமாதல் (Globalisation) என அழைக்கப்பட்டது.

சமூகத்தின் கணக்கிடக் கூடிய மேலணி (Upper fraction of the society) ஒன்றின் வருமானம் அளவின்றி அதிகரித்தது. மூலதனத்தின் கட்டற்ற இயக்கம்(Free movement) . சுதந்திர வர்த்தகம்(Free market) என்பன உலகமயமான நவ தாராளவாதத்தின் (globalised neo liberalism) அடி நாதமாக அமைந்திருந்தது. தொழிலளர்கள் மீது புதிய விதிகளைப் பிரயோகித்தது. இப்புதிய விதிகள் தொழிலாளர்களின் வாங்கும் சக்தியை (Purchasing power) கூட மேல்தட்டு வர்க்கத்தின் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க உதவியது.

தொழிலாளர்கள் இடையேயான போட்டியை உலக மயமான நவதாராளவதம் உருவாக்கியது. ஐரோப்பியத் தொழிலாளிக்கு வழங்கப்படும் சராசரி மாதாந்த ஊதியம் கூ1300 டொலர்கள். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஊதியத் தொகை 100 டொலர்கள் மிக அதிகமான தொகை. லத்தீன் அமரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் இதன் தொகை கூ50 இற்கும் அதிகமாவதில்லை. இது தொழிலாளர்கள் இடையே போட்டியை உருவாக்கியது. மேற்கில் வாழ்கின்ற தொழிலாளி நிரந்தரமான பய உணர்வுடனேயே வாழ்கின்ற நிலை உருவானது.

முதலீட்டாளர்கள் அவர்களின் இறுதி இரத்ததையும் உறிஞ்சிச் சுவைப்பதற்கு இது வழி செய்தது.

மேற்கு நாடுகளில் திட்டமிட்ட வேலையற்ற நிலையை உருவாக்கியது. நவீன தொழில் நுட்பம் உருவாக்கிய தகவல் தொழில் நுட்பத்தின் மூளை உழைப்பாளிகள் கூட இதே வழிகளில் சுரண்டப்பட்டனர். நிரந்தரமான பய உணர்வு அவர்கள்

10ம் பக்கம் பார்க்க

முதலாளித்துவத்தின் பேராசை, கொள்ளை, பித்தலாட்டம், போர்வெறி ஆகியவற்றை அமெரிக்காவின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். எனினும், திட்டவட்டமான மாற்று ஒன்றை முன்வைத்துப் போராட – ாதவரை, இவையெல்லாம் ஆற்றாமை தோற்றுவிக்கும் புலம்பல்களாகவே முடிகின்றன. சியாட்டிலில் தொடங்கி கடந்த பத்து ஆண்டுகளாக அடுத்தடுத்து பல முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்குலகில் நடந்த போதும், அவை முன்னேற முடியாமல் தேங்குவதற்கு இதுதான் காரணம். இந்தத் தேக்கம் தொடருமாயின், அது சோர்வையும் அவநம்பிக்கையையுமே மக்களிடம் பரப்பும். அவ்வகையில் அராஜகவாதிகள், பின் நவீனத்துவவாதிகள், றொஸ்கியவாதிகள், தன்னார்வக் குழுக்கள் உள்ளிட்ட பலரும் முதலாளித்துவத்தின் கையாட்களாக இருந்து மக்களைச் சிதறடிப்பார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் 06 மாத வாகன செலவு 293 கோடி
# வடபகுதி தமிழ் மக்களுக்கு வெறும் பாத்திரம்

### வரவு – செலவு குறித்து மக்கள் விடுதலை முன்னணி கண்டனம்



தனி ஒரு மனிதரான ஜனாதிபதியின் பாதுகாப்பு வாகனங்களுக்காக மட்டும் ஆறு மாதங்களுக்கு 293 கோடி ரூபா வை செலவிட்டுள்ள அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களை முற்றாக கைவிட்டுள்ளதாக ஜே.வி.பி யின் பாராளுமன்ற குழுத் தலைவர் தோழர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தர்.

வரவு-செலவு த்திட்ட உரை மீதான விவாதத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றிய தோழர் அநுரகுமார திசாநாயக்க மேலும் கூறியதாவது

போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் வரவு-செலவு திட்த்தில் ஏதாவது விமோசனம் கிடைக்கும் எனப் பெரும் எதிர்ப்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் அரசாங்கம் வடபகுதி மகடகளை முறட்றாக புறக்கணித்துள்ளது.

இறுதி யுத்தத்தின் போது வட பகுதியில் பல இலட்சம் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. வட மாகானத்தில் 27 ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். தாய், தந்தையரை இழந்த 5 ஆயிரம் பிள்ளைகளும் , பெற்றாரில் எவராவது ஒருவரை இழந்த 12ஆயிரம் பிள்ளைகளும் இருக்கின்றனர். இவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் 37ஆயிரத்து 500 வீடுகள் முற்றாகவும். 5ஆயிரத்து 700 வீடுகள் பகுதியாகவும், முல்லைத்தீவில் 18 ஆயிரத்து 600 வீடுகள் முற்றாகவும், 14 ஆயிரத்து 520 வீடுகள் பகுதியாகவும், கிளிநொச்சியில் 29 ஆயிரத்து 460 வீடுகள் முற்றாகவும், 33 ஆயிரத்து 800 வீடுகள் பகுதியாகவும், வவுனியாவில் 13ஆயிரத்து 156 வீடுகள் முற்றாகவும் 15ஆயிரம் 200வீடுகள் பகுதியாகவும் அழிக்கப்பட்டுள்ளன.

இருக்க இடமும், அடிப்படை வசதிகளும் இல்லாமல் துன்ப நிலையில் இருக்கும் இந்த மக்களுக்கு ஜனாதிபதி எவ்வதமான நிவாரணங்களையும் அறிவிக்கவில்லை. ஆனால், பாதைகளையும் , பாலங்களையும் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடகபுதி தமிழ் மக்ளின் அடிப்படை உரிமைகள் உதாசீனப்படுத்தப்"பட்டுள்ளன.

இந்த வரவு-செலவு திட்டம் ஒபப்ந்தக்காரர்களுக்கு நண்மைபயக்கும் திட்டமாகும். நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். தவறான புள்ளிவிபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மரணமடைந்த இராணுவத்தினரின் பெற்றோர்களுக்காக ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவும் .வயதுகூடிய வயோதிபர்களுக்கு ஆயிரத்து 300 மில்லியனும், அறநெறி பாடசாலைகளுக்கு 1150.00 மில்லியன் ரூபாவும், கலைஞர்களுக்காக 150 மில்லியன் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர். அது யானைப்பசிக்கு சோளப்பொறி போட்டது போன்ற செயலாகும்.

வேலையற்ற இளைஞர்கள் தமக்கு இம்முறைவரவு–செலவு திட்டத்தினூடாக தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கத்தை வலியுறுத்தி சோஸலிஸ இளைஞர் சங்கம் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் காட்சிகள் சில





நிதியமைச்சை நோக்கிச் செல்லும் ஆர்ப்பாட்ட பேரணி...





பேரணியை செல்லவிடாது தடுத்து கண்ணீர் புகைக்குண்டு வீசும் பொலிசார்..



பேரணியில் உரையாற்றுகிறர் சோஸலிஸ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க

# உலகில் பல நாடுகளில் 22வது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம்

### ■ இத்தாலி ரோம் நகரில்





ரோம் நகரில் நினைவு கூறப்பட்ட கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா அவர்கள் கலந்துக்கொண்டு உரையாற்றுகிறார்.

### ■ லண்டன் பரிஸ் நகரில்





லண்டன் பரிஸ் நகரில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் நிகழ்வில் கலந்துக்கொண்டு சுடரேற்றி நினைவு கூறி உரையாற்றும் தோழர் பிமல் ரத்நாயக்க.

### ■ குவைத்





குவைத் நாட்டில் நினைவு கூறப்பட்ட கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தலை தோழர் சோமவன்ச அமரசிங்க கலந்துக் கொண்டு உரையாற்றும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வல்வுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.